# பதில் ஜனாதிபதிக்கு முழு ஒத்துழைப்பு

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

**யோ.தர்மராஜ்**

நாட்டினுள் சட்ட, ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பதில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பினரிடம் கோரிக்கை விடுப்பதுடன், அதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக தெரிவித்துள்ளது.

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன் (Sinhala)

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 17 சுபகிருது வருடம், ஆனி மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை
(14.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 14, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

# பாதுகாப்புப் படையினர் பொறுப்புடன் செயற்படுக!

UNITED NATIONS HUMAN RIGHTS

## ஐ.நா. வலியுறுத்து

02 பக்கம்



# கோட்டா இராஜினாமா இழுபறி; பதில் ஜனாதிபதி ரணில்!



02 பக்கம்

# பிரதமர் அலுவலகத்தை போராட்டக்குழு ஆக்கிரமித்ததையடுத்து பதற்றம்

**யோ.தர்மராஜ்**

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்மீது முன்னெடுக்கப்பட்ட கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தையும் மீறி...

02 பக்கம்

# நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பாதுகாப்புத்துறைக்கு முழு அதிகாரம்

## பதில் ஜனாதிபதி ரணில் நேற்று அறிவிப்பு

**யோ.தர்மராஜ்**

ஊரடங்கு மற்றும் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி நாட்டில் இயல்பு நிலைமை ஏற்படுத்துமாறு பாதுகாப்பு சபையின் பிரதானி, பொலிஸ்மா அதிபர் மற்றும் முப்படை தளபதிகளின் குழுவிற்கு முழு அதிகாரத்தையும் வழங்கியுள்ளதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.


02 பக்கம்

# இருவரைப் பற்றியே சிந்திக்காமல் நாட்டு மக்கள் குறித்து சிந்தியுங்கள்

## எதிர்க்கட்சித்தலைவர் சஜித் வலியுறுத்து

கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க எனும் இருவர் தொடர்பில் சிந்திக்காமல் நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்கள் தொடர்பில் சிந்திக்குமாறு முப்படையினரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

02 பக்கம்



பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகக் கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போராட்டக்காரர்களால் பிரதமர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது.

# ரூபவாஹினிக்குள் ஒளிபரப்பு நிறுத்தம்

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குள்ளும் நேற்று போராட்டக்காரர்கள் நுழைந்தனர். இதனால் ஒளிபரப்பு சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குள் நுழைந்த தரப்பினர் அங்கு நேரலையில் கலந்துகொண்டு கருத்துக்களை வெளியிட்டனர். சில மணிநேரங்களின் பின்னர் ரூபவாஹினி ஒளிபரப்பு சேவைகள் வழமைக்குத் திரும்பின.

# சட்டத்தின் பிரகாரமே விமானம் வழங்கினோம்

## விமானப்படை அறிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிலிருந்து வெளியேறியமை தொடர்பில் இலங்கை விமானப்படை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி, அவரது பாரியார் மற்றும் இரு மெய்ப்பாதுகாவலர்களுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மாலைதீவு நோக்கி பயணிப்பதற்காக தற்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க விமானப்படை விமானமொன்று...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

இன்னும் கொஞ்ச நாளில
கண்ணீர்ப்புகைக்குண்டு
அடிச்சாலும் மக்களிட்ட கண்ணீர்
இருக்குமோ தெரியேல்ல...



# ஜனாதிபதி பதவி விலகாவிடின் நான் விலகுவேன் - சபாநாயகர்; உரிய ஆணை கிடைத்தால் அமைதியை நிலைநாட்டலாம் - ஷவேந்திர

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் ஆராய்வு



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அராஜக நிலைமையினைக் கட்டுப்படுத்த உரிய ஆணையை ஆட்சியாளர்கள் தருவார்களாயின் அதனை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா நேற்று கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில்..

02 பக்கம்



## உஷ்



முக்கியமான அரசியல்வாதிகள் பலர் வெளிநாடுகளுக்கு செல்ல விசாவுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால் அவசரமாக செல்வதற்கு அவர்களுக்கு விசா கிடைக்காத படியால் அவர்கள் தடுமாறிக் கொண்டிருப்பதாக தகவல்.

கடந்த காலங்களில் அராஜகமாக நடந்துகொண்ட அரசியல்வாதிகளின் விண்ணப்பங்களே இப்படி இழுத்தடிப்புச் செய்யப் படுகின்றனவாம்.

# இலங்கையில் போராட்டத்தில் ஈடுபடுவோர் குறித்து இந்தியாவை எச்சரிக்கும் சுவாமி

02 பக்கம்

# சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட படையினருக்கு ஒத்துழையுங்கள்

## ஜெனரல் ஷவேந்திர சில்வா கோரிக்கை

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி பதவி விலகியதுடன், புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படும்வரை நாட்டில் அமைதியை பேணுவதற்கு இராணுவம் மற்றும்....

02 பக்கம்

# கோட்டாவுக்கெதிராக மாலேயில் ஆர்ப்பாட்டம்

மாலைதீவுக்கு சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அந்நாட்டிலிருந்து வெளியேற்றுமாறு வலியுறுத்தி, மாலைதீவு ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகில் மாலைதீவு மக்களும் வெளிநாட்டவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவு வழியாக பயணம் செய்வதாகவும் மாலைதீவுக்கு விஜயம் செய்யவில்லை எனவும் இடைத்தங்கலுக்காகவே அவர் காத்துநின்றதாகவும் அந்நாட்டு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மேல் மாகாணத்தில் ஊரடங்கு; நாட்டில் அவசரகால நிலை!

மேல் மாகாணத்தில் உடன் அமுலாகும் வகையில் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்துமாறு பிரதமரும் பதில் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் நேற்று தெரிவித்துள்ளது.

அதேநேரம், நாடளாவிய ரீதியில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

# அனைத்து எம்.பிக்களும் ஒன்றுகூடி தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள்

## யாழில் மதத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்து



**(யாழ்.செய்தியாளர்)**

தற்போதைய நெருக்கடி நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைப்பதற்கு அனைத்து நாடாளுமன்றப் பிரதிநிதிகளும்...

02 பக்கம்

# அரச பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை

தற்போதைய நிலைமை காரணமாக அரச ஊழியர்களுக்கு இம்மாதம் உரிய திகதியில் சம்பளம் வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்படும் என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நேற்று தெரிவித்துள்ளார்.

சம்பளம் வழங்குவதற்கு பணம் அச்சிடப்பட்டு அதற்கான அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் அமைச்சரவைக் கூட்டத்தை அழைப்பதில் சிக்கல் இருப்பதாகவும், அதனைத் தவிர்ப்பதற்கு சில நாட்களுக்கு ஜனாதிபதியாக செயற்படவுள்ள...

02 பக்கம்

## ஜனாதிபதி பதவி...

நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், பொலிஸ் மா திபர் மற்றும் முப்படைகளின் தளபதிமார் கலந்து கொண்டனர். தற்போதைய நிலைமை நீடித்தால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து இங்கு பாதுகாப்புத் தரப்பினரால் கட்சித்தலைவர்களுக்கு விளக்கப்பட்டது.

இதன்போதே மேற்படி தெரிவித்துள்ள ஜெனரல் சவேந்திர, உடனடியாக நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டுமென சுட்டிக் காட்டியுள்ளார்.

பதில் ஜனாதிபதி பதவி மற்றும் பிரதமர் பதவிகளிலிருந்து ரணில் விலக வேண்டுமென இங்கு கட்சித்தலைவர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஜனாதிபதி பதவி விலக முன்னர் இது இடம்பெறவேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதியின் பதவி விலகல் குறித்து இங்கு கட்சித்தலைவர்கள் சபாநாயகரிடம் வினவியுள்ளனர்.

புதன்கிழமை 13ஆம் திகதி நேற்று இரவுக்குள் இந்த கடிதம் வருமென தாம் எதிர்பார்ப்பதாகவும் அப்படி வராதபட்சத்தில் தாம் பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லையென தெரிவித்துள்ளார்.

ஆனால் இப்போதைய நிலையில், சபாநாயகர் அப்படியொரு முடிவுக்கு வந்துவிடக்கூடாதென இங்கு கட்சித் தலைவர்கள் சபாநாயகரை கேட்டுள்ளனர்.

நாடாளுமன்றம் எப்போது கூடுவது என்பது குறித்து இங்கு தீர்மான மெதுவும் எடுக்கப்படவில்லை. போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு, ஆக்கிரமிக்க முயன்றால் இயன்ற அனைத்து பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும் செய்யுமாறு இங்கு கட்சித்தலைவர்கள் பாதுகாப்பு பிரதானிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## பதில் ஜனாதிபதிக்கு...

நாட்டின் நிலைமை குறித்து நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இருக்கும் வன்முறை யாளர்களின் செயற்பாடுகளை தீவிரமாக கண்காணிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

சட்ட, ஒழுங்குக்கு அப்பால் எதுவும் இருக்கமுடியாது. சட்டத்திற்கு மேல் யாரும் இருக்க முடியாது. நாட்டில் சட்ட, ஒழுங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதாலேயே மக்களின் உயிர் வாழும் உரிமை, அச்சுறுத்தலுக்கு உட்படாது, சுதந்திரமாக பாதுகாக்கப்படுகின்றது. அந்த உரிமையை விலக்கமுடியாது என்பதே எங்கள் நம்பிக்கையாகும். முழு சட்டம் மற்றும் சட்ட நிறுவனங் களின் செயற்பாடுகளுக்கு எதிராக செயற்படுவதற்கோ அல்லது அதற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கோ இடமளிக்க முடியாது.

அண்மைக்காலத்தில் நாட்டில் வன்முறை சம்பவங்கள் இடம் பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டு பலரும் கொலை செய்யப்பட்டதுடன், அவர்களின் சொத்துக்களும் சேதமாக்கப் பட்டுள்ளது. அவ்வாறான சம்பவம் மீண்டும் மீண்டும் இடம்பெற்றுக் கொண்டிருக் கின்றது.

எனவே, மக்களின் பாதுகாப்பு மற்றும் உயிர்வாழும் உரிமையை பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் பதில் ஜனாதிபதிக்கு முழு ஒத்துழைப்பை வழங்குகிறோம்.

## பிரதமர் அலுவலகத்தை...

பிரதமர் அலுவலகத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று (13) பதவி விலகுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், காலை வரை எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பும் இல்லாததோடு, அவருடன் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பதவி விலக வேண்டும் எனக் கோரி அவருக்கு எதிரான போராட்டமொன்றை பிரதமர் அலுவலகத்திற்கு முன்பாக முன்னெடுத்திருந்தனர்.

குறிப்பாக, பிரதமர் பதவி விலகாத பட்சத்தில் அவரே பதில் ஜனாதிபதி என்பதால், அதனை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, பிரதமரும் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிடுவதற்காக பாதுகாப்பு வேலிகளையும் தகர்த்தெறிவதற்கு முயற்சித்தமையினால், போராட்டக்காரர்களின் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், அவற்றையும் மீறி பாதுகாப்பு வேலிகளை தகர்த்தெறிந்து, பிரதமர் அலுவலகத் தின் நுழைவாயில்வரை போராட்டக்காரர்கள் முன்னோக்கிச் சென்றனர். இதனால், அப்பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டதோடு, பிரதமர் அலுவலகத்திற்கும் கடும் பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், போராட்டக்காரர்கள் பிரதமரின் நுழைவாயிலை உடைப்பதற்கு முயற்சித் தமையினால், போராட்டக்காரர்கள் மீது தொடர்ந்து கண்ணீர்ப்புகை தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதோடு, வானத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப் பட்டது.

எனினும், போராட்டக்காரர்ரகள் கலைந்து செல்ல மறுத்தமையினால், அப்பகுதியில் பதற்ற நிலைமை தொடர்ந்தது. இதனையடுத்து, பதில் ஜனாதிபதி என்ற வகையில் மேல் மாகாணத்திற்கு ஊரடங்கு சட்டத்தையும் முழு நாட்டிற்கும் அவசரகால சட்டத்தையும் அமுல்படுத்துமாறு ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டார்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதைய டுத்து, தங்களை கட்டுப்படுத்துவதற்கு சட்டத்தை பயன்படுத்த வேண்டாம் எனக் கூறி கூச்சலிட்ட போராட்டக்காரர்கள், நேற்று நண்பகல் வேளையில் பலத்த பாதுகாப்பையும் மீறி நுழைவாயிலை உடைத்துக்கொண்டு பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

சிலர் பிரதமரின் அலுவலகத்தின் பின்பக்கத்திலுள்ள பாதுகாப்பு வேலியையும் உடைத்து உள்நுழைந்தனர். இதனையடுத்து, பிரதமர் அலுவலகம் முற்று முழுதாக போராட்டக்காரர்கள் வசமானது.

இதேவேளை, போராட்டத்தில் படுகாய மடைந்து 28 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் ஒரு பெண்ணும் உள்ளடங்குவதுடன், 26 வயது இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## இருவரைப் பற்றியே...

நாட்டின் நெருக்கடி நிலைமை தொடர்பில் விசேட உரையாற்றியபோதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிராயுத பாணியான மக்கள் மீது அடக்குமுறையும் அரச பயங்கரவாதமும் பிரயோகிக்கப்பட்டு, தாக்குதல் நடத்தப்படக்கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்கள் மீது அநீதியாக அடக்கு முறையை பிரயோகித்து மிலேச்சத்தனமாக குரூர தாக்குதல் நடத்துவதை வன்மையாக கண்டிப்பதாகவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் வீடு செல்ல வேண்டும் என்பதே மக்களின் ஏகோபித்த கோஷமாகவுள் ளதெனவும் ரணில் விக்ரமசிங்கவிற்கு இவை கேட்கவில்லையா எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அரச, பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கக்கூடாது எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ந்தும் பதவியில் நீடிப்பதற்கான வியூகங்களை வகுக்க வேண்டாமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தனது விசேட உரையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இலங்கையில் போராட்டத்தில்...

இலங்கையில் ஆட்சி மாற்றத்தை வலியுறுத்தியதாக போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் தீவிரவாத இயக்க பின்னணியில் செயற்படுவதாகவும் அவர்கள் குறித்து இந்தியா கவனமாக இருக்கவேண்டும் எனவும் சுப்பிரமணியன் சுவாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தனது ட்விட்டர் பதிவில், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள அவர்,

கொழும்பில் சுற்றித் திரியும் கட்டுக்கடங்காத கூட்டத்தினர், நக்சல்கள், ஜிஹாதிகள், சமூக விரோதிகளால் வழிநடத்தப்படும் தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே, இந்த பிரிவுகளால் இலங்கையின் சீரழிவு மற்றும் தமது நாட்டின் எதிர்கால தாக்கம் குறித்து இந்தியா கவனம் செலுத்தவேண்டும் என்று சுப்பிரமணியன் சுவாமி கோரியுள்ளார்.

முன்னதாக ராஜபக்ஷர்களை இந்தியா பாதுகாக்க, இந்தியா தமது படைகளை அனுப்ப வேண்டும் என்று சுப்பிரமணிய சுவாமி கோரியிருந்தார்.

எனினும் இந்த கோரிக்கையை இந்திய வெளிவிவகாரத்துறை நிராகரித்திருந்தது.

## கோட்டா ...

***(யோ.தர்மராஜ்)***

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்வாரென சொல்லப்பட்டபோதும் நேற்று அது தொடர்பில் இழுபறி நிலைமையே இருந்தது. எவ்வாறாயினும் பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்ரசிங்க நேற்று பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜிநாமா கடிதம் நேற்றிரவு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு அனுப்பிவைக்கப்பட்டு, உத்தியோபூர்வமாக அறிவிக்கப்படுமென சொல்லப்பட்டபோதும் இந்த செய்தி எழுதப்படும்வரை அப்படியொரு அறிவிப்பு வரவில்லை.

நாட்டில் உக்கிரமடைந்துள்ள நெருக்கடிகளுக்கு முக்கிய காரணமானவர் என ஜனாதிபதியை பதவி விலகுமாறுக் கோரி கடந்த 9 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பாரிய போராட்டத்தினால் ஜனாதிபதி பதவிலியிருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அதற்கமைய, 13 ஆம் திகதி (நேற்று) தான் தன்னுடைய ஜனாதிபதி பதவிலிருந்து விலகுவதாக கடந்த 9 ஆம் திகதி சபாநாயகரிடம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். எனினும், தன்னுடைய பதவி விலகல் கடிதத்தையும் அவர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அவர் விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்திருந்த போதிலும், பயணிகள் மற்றும் அதிகாரிகளின் எதிர்ப்பினால் அந்த முயற்சியும் தோல்வியடைந்தது. இதேவேளை, அமெரிக்கா செல்வதற்கான வீசாவை வழங்குவதற்கு அதிகாரிகள் மறுப்பு தெரிவித்ததால், விமான நிலையத்தின் ஊடாக அமெரிக்கா செல்வதும் தோல்வியுற்றது.

இந்த நிலையில், விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தின் ஊடாக அவரும் அவருடைய பாரியாரும் இரு பாதுகாப்பு அதிகாரிகளுடன் நேற்று அதிகாலை இங்கிருந்து புறப்பட்டு மாலைதீவிலுள்ள மாலே நகருக்குச் சென்றனர். எனினும், அதுவரை அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதற்கான உத்தியோகபூர்வை அறிவிக்காமல் , ஜனாதிபதி என்ற அதிகாரத்துக்கு அமையவே, விமானப்படையின் விமானத்தின் ஊடாக அங்குச் சென்றிருந்தார்.

இதனையடுத்து, ஜனாதிபதி பதவி விலகியிருப்பார், பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி ஏற்றுக்கொள்வார் என்பதால் நேற்று காலை பிரதமர் அலுவலகத்தை போராட்டக்காரர்கள் சுற்றி வளைத்தனர். இதனால், அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்ட கையோடு, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மேல் மாகாணத்திற்கு ஊரடங்கு சட்டத்தையும் முழு நாட்டுக்கும் அவசரகால சட்டத்தையும் அமுல்படுத்துமாறும், வன்முறையை தூண்டுவோரையும் அவர்கள வரும் லொறி உள்ளிட்ட வாகனங்களையும் கைது செய்யுமாறு பாதுகாப்பு தரப்புக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதற்கிடையில், ஜனாதிபதி விலகுவதற்கான உத்தியோகபூர்க கடிதத்தை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. எனவே, இதுவரை பதில் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படவில்லை எனவும் சபாநாயகர் அறிவிப்பு விடுத்திருந்தார்.

இதனால், பிரதமரால் எவ்வாறு ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த உத்தரவிட முடியும். அவர் பதில் ஜனாதிபதியா என்ற கேள்விகள் எழ ஆரம்பித்தன. எனினும், பதில் ஜனாதிபதி என்ற அடிப்படையிலேயே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால், ஊரடங்கு சட்டமும் அவரச கால சட்டமும் அமுல்படுத்தப்பட்டதாக பிரதமர் அலுவலகம் அறிவித்தது.

இந்த அறிவித்தலுக்கு பின்னர், விசேட அறிவிப்பை வெளியிட்ட சபாநாயகர் மஹிந்தயாப்ப அபேவர்தன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதால், அந்தப் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றும் நிமித்தம், அரசியலமைப்பின் 37 (1) ஆம் சரத்துக்கமைய பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை நியமித்துள்ளதாக தனக்கு, ஜனாதிபதி தெரியப்படுத்தியுள்ளதாக கூறினார். அதற்கமைய, பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்டிருப்பது அறிவிக்கப்பட்டது. எனினும், நேற்று மாலை வரை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய இராஜிநாமா கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பியிருக்கவில்லை. இதற்கிடையில், மீண்டும் விசேட அறிப்பொன்றை வெளியிட்ட சபாநாயகர் மஹிந்தயாப்பா அபேவர்தன,

தொலைபேசியில் அழைப்பு விடுத்து பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இதற்கு முன்னர் தன்னிடம் தெரிவித்தது போன்று, தான் தன்னுடைய பதவியிலிருந்து விலகுவதாகவும், அதற்கான இராஜிநாமா கடிதத்தை இன்றைய (நேற்று) தினத்துக்குள் தனக்கு அனுப்பி வைப்பதாக தன்னிடம் தெரிவித்தார் என்று குறிப்பிட்டார்..

அதற்கமைய, நாடாளுமன்றத்தில் ஏற்பாடு செய்தது போன்று, எதிர்வரும் 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். இது குறித்து யாரும் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை என்பதோடு, அதுவரை அனைரும் அமைதியான முறையில் செயற்படுமாறும் நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

எவ்வாறாயினும் நேற்று மாலை கூடிய கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட சபாநாயகர் ,நேற்று நள்ளிரவுக்குள் ஜனாதிபதியின் இராஜினாமா கடிதம் கிடைக்குமென நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

## அரச பணியாளர்களுக்கு...

ரணில் விக்ரம சிங்கவினால் அவசர அமைச்சரவைக் கூட்டத்தை அழைப்பது மாத்திரமே அவசியமானது எனவும் அந்த அமைச்சர் தெரிவித்தார்.

அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் 25ஆம் திகதி சம்பளத்தை வழங்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் முடிவு நாணயச் சபைக்கு அனுப்பப்பட்ட பின்னர் பணத்தை அச்சிடுவதற்கு சட்டப்பூர்வமான இடம் வழங்கப்படும்.

மேலதிக நேரம், விடுமுறைகள், வாழ்க்கைச் செலவுப்படி என சகல கொடுப்பனவுகளையும் தவிர்த்து சம்பளத்துக்கு மாத்திரம் மாதாந்தம் சுமார் 29 பில்லியன் ரூபா தேவைப்படும் எனக் கூறப்படுகிறது.

## சட்டத்தின் பிரகாரமே...

நேற்று (13) அதிகாலை வழங்கப்பட்டதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க தற்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளின் அடிப்படையில், பாதுகாப்பு அமைச்சின் பூரண அங்கீகாரத்தின் கீழ் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு, சுங்க மற்றும் ஏனைய அனைத்து சட்டங்களுக்கு உட்பட்டு ஜனாதிபதி, அவரது பாரியார் மற்றும் இரு மெய்ப்பாதுகாவலர்களுடன் மாலைதீவிற்கு புறப்படுவதற்காக விமானமொன்று வழங்கப்பட்டதாக குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் இந்த பயணத்திற்கு இந்தியாவினால் சலுகைகள் வழங்கப்படுவதாக வெளியான தகவல்களை நிராகரிப்பதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் ட்விட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளது.

நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என குறித்த ட்விட்டர் பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அனைத்து எம்.பிக்களும்..

ஒன்று கூடி தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள் என மதத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே சமயத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தினர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் அறிக்கையில், சகல தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் ஒன்று கூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் எடுக்கவேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன் வரவேண்டும்.

வடக்கு-கிழக்கு, மலையகம், தெற்கு என்ற பேதமின்றி தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள், கட்சித் தலைவர்கள் வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்று கூடவேண்டிய தருணம் இது. எனவே அறிவு பூர்வமாக தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள். இது காலத்தின் கட்டாயம். இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப்பீர்கள். ஆனால்,அது மாபெரும் வரலாற்றுத் தவறாகும்.

இவ் ஊடக சந்திப்பில் நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சட்டம் ஒழுங்கை...

பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு, முப்படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா அனைவரிடமும் கோரிக்கைவிடுத்துள் ளார். கொழும்பில் நேற்று (13) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, நாட்டின் பதற்ற நிலைமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்புக்கு அமையவே, இராணுவமும் பொலிஸாரும் செயற்படுகின்றனர். ஜனாதிபதியின் பதவி விலகல் இன்று (நேற்று) இடம்பெறும் என சபநாயகர் எங்களுக்கு தெரியப்படுத்தினார். அதற்கமைய, ஜனாதிபதி பதவி விலகியதன் பின்னர், புதிய ஜனாதிபதி நியமிக்கப்படும்வரை, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நாங்கள் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

இதேவேளை, அனைத்து கட்சித் தலைவர் களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, அரசியல் ரீதியாக எடுக்கப்படும் தீர்மானங்களையும் எங்களுக்கு அறிவிக்குமாறு நாங்கள் சபாநாய கரிடம் கோரிக்கைவிடுத்தோம். அதன்படி, குறித்த அரசியல் தீர்மானங்கள் மக்களுக்கும் அறிவிக்கப்படும் என எதிர்பார்த்தோம்.

இந்த நிலையில், ஜனாதிபதி பதவி விலகியதுடன், புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படும்வரை நாட்டில் அமைதியை பேணுவதற்கு இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோன்று, அரச மற்றும் தனியார் சொத்துக்களை சேதப்படுத்தாது, நாட்டில் அமைதியை பேணுவதற்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## பாதுகாப்புப் படையினர்...

இலங்கையின் தற்போதைய நிலைமையில் இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் படைகள் மனித உரிமைகளை மதிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

வன்முறையில் இருந்து விலகி அமைதியான அரசியல் மாற்றத்தை உறுதிசெய்யுமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம். சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் பரந்த, உள்ளடக்கிய செயல்முறை தேவை. தலைவர்கள் உயிர்கள், சொத்துக்கு மரியாதை கொடுக்கவேண்டும். இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புப் படைகள் மனித உரிமைகளை மதிக்க வேண்டும் மற்றும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஐ.நா. சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## நாட்டில் சட்டம்...

நாட்டின் பதற்ற நிலைமை குறித்து நேற்று (13) நாட்டுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் ஏற்படும் நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கடந்த திங்கட்கிழமை விசேட கட்சித் தலைவர்க் கூட்டத்தை நடத்தியிருந்தோம். இதன் போது, எதிர்வரும் வாரத்தில் ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பை நடத்தவும் அதற்காக உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்கு தீர்மானம் எடுத்தோம்.

இதேவேளை, சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்படுமாக இருந்தால் பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக நான் உறுதியளித்திருந்தேன். இதற்கிடையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தை கூட்டுவோம் எனக் கூறி, கட்சித் தலைவர் கூட்டமும் நிறைவுற்றது. இதற்கிடையில், அனைத்து கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்தி சர்வ கட்சி அரசாங்கத்துக்கான ஆதரவை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தன. இவ்வாறானதொரு ஜனநாயக சூழ்நிலையே நாட்டிலிருந்தது.

இந்த நிலையில், தன்னுடைய இராஜிநாமா கடிதத்தை சபாநாயகருக்கு கையளித்துவிட்டு, நாட்டை விட்டு வெளியேறுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னிடம் அறிவித்தார். ஆனால், போராட்டக்காரர்களினால் பிரதமர் அலுவலகமும் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேற விமானம் வழங்கிய, விமானப்படை தளபதியின் வீட்டையும் அத்தோடு, இராணுவத் தளபதி மற்றும் கடற்படை தளபதியின் வீடுகளையும் முற்றுகையிடுவதற்கு திட்டமிட்டிருப்பதாக, புலனாய்வு தகவல்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. மேலும், நாடா ளுமன்றத்தையும் சுற்றிவளைப்பதற்கான திட்டமும் இருந்தது.

எனினும், இராணுவப் படைகளின் பிரதானியுடன் பேச்சுவார்த்தை நடத்திய சபாநாயகர், நாடாளுமன்றத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதால், இன்று அங்குச் செல்ல முடியவில்லை. ஆனால், பிரதமர் அலுவலகத்தை சுற்றிவளைத்து போராட்டம் நடத்துகின்றனர். அவர்களுக்கு பிரதமர் அலுவலகத்திற்குச் செல்வதற்கு எவ்வித தேவையுமில்லை. மாறாக, சட்டப்பூர்வமாக நான் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு, சபாநாயகருடன் இணைந்து, புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்வதை தடுத்து நிறுத்துவதோடு, தங்களுக்கு தேவையான ஒருவரை தேர்ந்தெடுப்பதே அவர்களின் நோக்கமாகும்.

நாட்டின் அரசியலமைப்பு தேவையில்லை. நாங்கள் கூறுவதை செய்யுமாறு சிலர் கூறியுள்ளனர். மக்களின் சர்வஜன வாக்குரிமையை நடைமுறைப்படுத்துவது அரசியலமைப்பு என்பதால், அதனை கிழித்தெறிய முடியாது. அரசியலமைப்பு தேவையில்லை என்பது அரசியலமைப்புக்கு விரோதமானது. இந்த நிலையில், இன்றைய (நேற்று) நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு அவசரகால சட்டத்தையும் ஊரடங்கு சட்டத்தையும் அமுல்படுத்துமாறு பாதுகாப்புத்தரப்பினர் எனக்கு ஆலோசனை வழங்கினர். அதற்கமைய, ஊரடங்கு மற்றும் அவசரகால சட்டத்தை நான் அமுல்படுத்தியுள்ளேன்.

அச்சுறுத்தல்களை கட்டுப்படுத்த வேண்டும். சாதாரண மக்களின் வீடுகளை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அச்சுறுத்தி, ஜனாதிபதி செயலகம், மாளிகை என்பவற்றை கைப்பற்றி, அங்குள்ள ஆவணங்களை அழிப்பதற்கு இடமளிக்க முடியாது. எனவே, ஊரடங்கு மற்றும் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி நிலைமையை கட்டுப்படுத்தி நாட்டை சாதாரண நிலைமைக்கு கொண்டுவருமாறு பாதுகாப்பு துறைக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன். அதற்கமைய, பாதுகாப்பு சபையின் பிரதானி, பொலிஸ்மா அதிபர் மற்றும் முப்படை தளபதிகளின் குழுவிற்கு முழு அதிகாரத்தையும் வழங்கியுள்ளோம். இதில் அரசியல் தலையீடுகள் இல்லை. இந்த நிலைமையை கட்டுப்படுத்திய பின்னர் எனக்கு அறியத்தருமாறு கூறியுள்ளேன்.

இது உங்களுடைய எதிர்காலம். உங்களுடைய எதிர்காலத்திற்காக சட்டங்களை பாதுகாக்க வேண்டிய காலப்பகுதியாகும். எனவே, இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் முழு ஆதரவையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

# நாடாளுமன்ற சுற்றுவட்டாரமும் ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைப்பு!





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுடன் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருந்ததையடுத்து, நேற்றைய தினமும் (13) கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரதமர் அலுவலகமான அலரி மாளிகை நேற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களினால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று மாலை நாடாளுமன்றத்தை அண்மித்த பொல்வதுவ சந்தியிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை நிலவியது.

இந்நிலையில், அப்பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலைமுதல் பிரதமர் செயலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டுவந்த நிலையில், பிற்பகல் அளவில் போராட்டக்காரர்கள் பிரதமரின் செயலகத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அப்பகுதியில் தொடர்ந்து போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன.


















அலரிமாளிகை நேற்று (13) ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றிவளைக்கப்பட்டதுடன், நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக பாதுகாப்புப் பிரிவினரால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்த் தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.
(படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே, எஷான் தஸநாயக்க)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூலை 14ஆம் திகதி, வியாழக்கிழமை

# செய்வதையெல்லாம் செய்துவிட்டு இப்படி தப்பியோட இடமளிக்கலாமா?

'வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்'

பொய்யாமொழிப் புலவனின் மேற்படி குறள், ஒரு நாட்டினது அரசாட்சியதிகாரத்தின் மாட்சிமையை எடுத்துச் சொல்கிறது.

'நாட்டுக்கு வெற்றி தருவது படைப்பெருக்கமன்று. எவ்வளவுதான் படைப் பெருக்கமுடையதாக இருந்தாலும் ஆட்சி நேர்மையானதாக இல்லாது போனால், தன்னாட்டு மக்களால் வெறுக்கப்பட்டு, வேற்று நாட்டார்க்கு அடிமையாக வேண்டியதுதான். ஆதலின், படைப் பெருக்கத்தினும் ஆட்சிமுறைச் சிறப்பே வெற்றியைத் தருவது எனக் கருதி நல்லாட்சி நடத்தல் வேண்டும்' என அதன் பொருள் விரிகிறது.

இராணுவத்தை வழிநடத்தியமைக்காக அந்த இராணுவத்தையே பயன்படுத்தி அரசாட்சி நடத்திவிடலாம் என்ற இறுமாப்புடைய, நாட்டு மக்கள் அனைவரையும் சரிசமமாகப் பேணாத, தன்னிச்சையான செயற்பாடுகளால் ஆணவம் கொண்ட ஜனாதிபதி நாட்டைவிட்டே தப்பியோடும் அளவுக்கு மக்கள் சக்தி மேலோங்கியிருக்கிறது.

இந்தப் பாடம், அதிகாரத்தில் உள்ள, அதிகாரத்துக்காக ஆசைப்படும் அனைவருக்குமானது என்பதை மிகத் தெளிவுறச் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் அது சாலப்பொருத்தமானதாகும்.

ஆம்! இலங்கையின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மக்கள் சக்திக்குப் பயந்து தனது பாரியாருடன் நேற்று அதிகாலை நாட்டைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.

இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திராத நிகழ்வு இது.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக குறிப்பிட்டிருந்தபோதிலும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி விமானப்படையின் விசேட விமானம் மூலம் மாலைதீவுகளுக்கு அவர் சென்றுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி காலி முகத்திடலில் அமைக்கப்பட்ட "கோட்டா கோ கம"வில் மூன்று மாதங்களுக்கு மேலாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், நாட்டின் பெரும்பான்மை மக்களின் ஆணை தனக்கு இருப்பதாகக் கூறி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக மறுத்துவந்தார்.

இந்நிலையில், ஜூலை 09 "முழுநாடும் கொழும்புக்கு" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை என்பன போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டன.

ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலகாவிட்டால் இந்த இடங்களிலிருந்து வெளியேறப்போவதில்லையெனவும் போராட்டக்காரர்கள் அறிவித்தனர். முழு நாட்டு மக்களின் எதிர்ப்பின் காரணமாக ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவேண்டிய நிர்ப்பந்தம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டதுடன், ஆளும், எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனையே வலியுறுத்தியிருந்தனர்.

அரசாங்கத்தின் தவறான வரிக்கொள்கை, முறையற்ற நிதி முகாமைத்துவம், தொலைநோக்கற்ற பார்வை காரணமாக நாடு மிக இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ மீது மக்கள் வைத்த அதீத நம்பிக்கை காரணமாக அவரை ஜனாதிபதியாக தெரிவுசெய்தனர். குறிப்பாக சிங்கள மக்களின் வாக்குகளினாலேயே அவர் ஜனாதிபதியானார். அதனை அவர் பொது மேடைகள் பலவற்றில் சொல்லியிருந்தார்.

போரை முடிவுக்குக் கொண்டுவந்தோம், புலிகளைக் கொன்றோம் என்ற வாசகங்களை தாரக மந்திரமாகப் பயன்படுத்தி சிங்கள மக்களை கோட்டா அரசு வசியப்படுத்தியது. ஆமாம், இது சிங்கள தேசம். விட்டால் தமிழர்களும், முஸ்லிம்களும் ஆட்சியமைத்துவிடுவார்கள் என்றபடியான நம்பிக்கைத் தோரணையில் சிங்களவர்களும் வாக்களித்தனர்.

இந்த அரசாங்கம் ஆட்சியமைத்து ஒரு வருடம் கடந்தபின்பு எது உண்மை என்பதை சிங்கள மக்கள் உணரத் தொடங்கினார்கள். அதன் விளைவாக இடம்பெற்ற தொடர் போராட்டங்களின் உச்சகட்டம் கடந்த ஜூலை 09 ஆம் திகதி அரங்கேறியது.

தன்னை நம்பிய மக்களைக் கைவிட்டு முழு உலகத்துக்கும் தவறான உதாரணத்தைக் காட்டி நாட்டை விட்டுத் தப்பிச்சென்றுள்ளார் கோட்டாபய ராஜபக்ஷ. இதனைக் கர்மா என சமூக ஊடகங்களில் பலர் விளித்தாலும், ஜனநாயகத்தைக் காக்க முடியாத, தோல்வியடைந்த ஜனாதிபதியாக அவர் வெளியேறியிருக்கிறார் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் 52.25 வீத வாக்குகளைப் பெற்ற தலைவன், மக்களுக்குப் பொறுப்புக் கூறாமல் தப்பிச்சென்றமையை எங்ஙனம் நியாயப்படுத்த முடியும்?

இதற்குப் பதிலை, நாம் மேற்சொன்ன திருக்குறள் புடம்போட்டுக் காட்டுகிறது.

# மறக்கமுடியா கலைஞன் எம்.எஸ்.வி

மனயங்கத்து சுப்பிரமணியன் விசுவநாதன் அல்லது எம்.எஸ்.விஸ்வநாதன் அல்லது பொதுவாக எம்.எஸ்.வி. (24 ஜூன் 1928 – 14 ஜூலை 2015) தமிழ்த் திரைப்படவுலகில் புகழ்பெற்று விளங்கிய இசையமைப்பாளர் ஆவார். இவர் கேரளாவின் பாலக்காட்டுக்கு அருகில் எலப்புள்ளி என்ற கிராமத்தில் 1928ஆம் ஆண்டு மலையாளக் குடும்பத்தில் பிறந்தார். இவரின் தந்தை சுப்பிரமணியன். தாய் நாராயண குட்டியம்மாள் (நானிக்குட்டி). விஸ்வநாதன் 1953 ஆம் ஆண்டில் வெளிவந்த ம.கோ.இராமச்சந்திரனின் ஜெனோவா திரைப்படத்தில் வெளிவந்த நான்கு பாடல்களுக்கு முதன்முதலாக இசையமைத்தார். தமிழ், மலையாளம், கன்னட மொழிகளில் சுமார் 1700 திரைப்படங்களுக்கு இசையமைத்தார். தெலுங்கு, ஹிந்தி மொழிப் படங்களுக்கும் இசையமைத்திருந்தார்.

தனது நான்காவது வயதிலேயே தந்தையை இழந்த விஸ்வநாதன், கண்ணனூரில் உள்ள தன் தாத்தா கிருஷ்ணன் நாயர் வீட்டிற்கு சென்று வளர்ந்தார். பள்ளிப் படிப்புப் படிக்காத இவர் இசையின் மீது கொண்ட நாட்டத்தால் அங்கு கர்நாடக இசையை நீலகண்ட பாகவதரிடம் பயின்று 13ஆவது வயதிலேயே மேடைக் கச்சேரி நிகழ்த்தினார். இசையமைப்பாளர் சி.ஆர்.சுப்புராமன் இசைக்குழுவில் இவர் ஆர்மோனியத்தையும், டி.கே.ராமமூர்த்தி வயலினையும் வாசிப்பவர்களாக பணிபுரிந்தார்கள்.

### இசைப் பயணம்

உடல்நலக் குறைவு காரணமாக, சி.ஆர். சுப்புராமனுடைய மறைவால் முழுமை பெறாமல் இருந்த தேவதாஸ், சண்டிராணி, மணமகள் போன்ற படங்களை அவரின் உதவியாளர்களாக இருந்த விஸ்வநாதனும், ராமமூர்த்தியும் முடித்துக்கொடுத்தார்கள். தேவதாஸ் (தமிழ் & தெலுங்கு) மற்றும் சண்டிராணி (தமிழ், தெலுங்கு & ஹிந்தி) படங்களின் இணை இசையமைப்பாளர்களாக இவர்கள் இருவரும் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். இப்படங்கள் வெற்றி பெற்றதால் ஹிந்தியில் சங்கர்–ஜெய்கிஷன் என்ற பெயரில் புகழ்பெற்ற இரட்டை இசையமைப்பார்கள் இருந்தது போல் தமிழில் விஸ்வநாதன்–ராமமூர்த்தி என்ற இரட்டை இசையமைப்பாளராக உருவாகலாம் என்ற எண்ணத்தை விஸ்வநாதன் – ராமமூர்த்தியிடம் தெரிவித்து அவர்களது இணக்கத்தைப் பெற்றார்.

இவர்கள் இருவரும் பணம் என்ற திரைப்படத்திற்கு முதலில் இணைந்து இசையமைத்தார்கள். ஆயிரத்தில் ஒருவன் திரைப்படம் வரை இணைந்து இசையமைத்தார்கள். 1995இல் சத்யராஜ் நடித்த எங்கிருந்தோ வந்தான் என்ற திரைப்படத்தில் இருவரும் மீண்டும் இணைந்து இசையமைத்தார்கள். விஸ்வநாதன் தனியாக 950 படங்களுக்கு மேல் இசையமைத்தார். இளையராஜாவோடு சேர்ந்து, மெல்லத் திறந்தது கதவு, செந்தமிழ்ப்பாட்டு, செந்தமிழ்ச்செல்வன் என மூன்று படங்களுக்கு இசை அமைத்தார். 1963ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி மதராஸ் திரிப்ளிகேன் கல்சுரல் அகாடமி சார்பில் இந்து நாளிதழ் உதவியுடன் இயக்குனர் ஸ்ரீதர் மற்றும் "சித்ராலயா" கோபு முன்னிலையில் நடைபெற்ற விழாவில் சிவாஜி கணேசனால் விஸ்வநாதன் – ராமமூர்த்திக்கு மெல்லிசை மன்னர்கள் என்று பட்டம் வழங்கப்பட்டது.

### நடிகராக விஸ்வநாதன்

கண்ணகி, காதல் மன்னன், காதலா காதலா போன்ற 10க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். ஏ.பீம்சிங், கிருஷ்ணன்–பஞ்சு, ஏ.சி.திருலோசந்தர், கே.பாலச்சந்தர் போன்ற இயக்குநர்களுடன் அதிகமாகப் பணியாற்றினார். தமிழ்த்தாய் வாழ்த்தான நீராடும் கடலுடுத்த பாடலுக்கு மோகன ராகத்தில் இசைக் கோர்ப்பு செய்தவர் விஸ்வநாதன். வி.குமார், இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், கங்கை அமரன், தேவா, யுவன் சங்கர் ராஜா, ஜி.வி.பிரகாஷ் குமார் போன்ற இசையமைப்பாளர்களின் இசையில் பாடினார்.

### இசையமைத்த திரைப்படங்கள்

தமிழ் – 800 திரைப்படங்கள்
மலையாளம் – 80 திரைப்படங்கள்
தெலுங்கு – 30 திரைப்படங்கள்
கன்னடம் – 15 திரைப்படங்கள்




# இன்றைய நாளில்...

- 1798 – அமெரிக்க அரசைப் பற்றி அவதூறாகவோ, பொய்யாகவோ எழுதுவதும், பிரசுரிப்பதும் குற்றமாக ஐக்கிய அமெரிக்காவில் சட்டம் இயற்றப்பட்டது.
- 1814 – மட்டக்களப்பில் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1938 – அவார்ட் இயூஸ், உலகைச் சுற்றி 91 மணிநேரங்களில் விமானத்தில் பறந்து உலக சாதனையை ஏற்படுத்தினார்.
- 1965 – மரைனர்-4 விண்கலம் செவ்வாய்க் கிரகத்துக்குக் கிட்டவாகச் சென்று முதல் தடவையாக வேறொரு கிரகத்தின் மிக அண்மையான படங்களை பூமிக்கு அனுப்பியது.
- 1967 – நாசாவின் சேர்வெயர்-4 ஆளில்லா விண்கலம் ஏவப்பட்டது.
- 1976 – கனடாவில் மரண தண்டனை முறை ஒழிக்கப்பட்டது.
- 1995 – இலங்கை இராணுவத்தினரின் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் புக்காரா ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 2015 – நாசாவின் நியூ ஹரைசன்ஸ் விண்கலம் புளூட்டோவுக்கு அண்மையாக முதல் தடவையாக சென்றது.

# நக்கல் நமசிவாயம்

உந்த கண்ணீர்ப் புகை குண்டுகளை வாங்கின காசுக்கு சமையல் கேஸ்களையாவது வாங்கியிருக்கலாம்..



# சமூகத் தொண்டாற்றிய மூத்த வைத்தியர் எம்.ஐ.எம்.ஜெமீலுக்கு சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலினால் சேவைநலன் பாராட்டு



**- மாளிகைக்காடு நிருபர் -**

சாய்ந்தமருது பிரதேச மருத்துவம், பெண்கல்வி மேம்பாடு, சமூகசேவை வேலைத்திட்டங்களில் மும்முரமாக பணியாற்றிவந்த சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்மாப் பெரியபள்ளிவாசல் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பின் ஸ்தாபக தலைவருமான டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீலின் சேவைநலன் பாராட்டு நிகழ்வு சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்மாப் பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் தலைமையில் சாய்ந்தமருதில் நேற்று (13) இடம்பெற்றது.

1966ஆம் ஆண்டு முதல் கிழக்கிலங்கையில் மிகவும் பிரசித்திபெற்ற வைத்தியராக அறியப்பட்ட டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் பெண் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் மும்முரமாக செயற்பட்டவர்.

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்மாப் பெரியபள்ளிவாசல் தலைவராக 07 ஆண்டுகளாக பணியாற்றி ஸக்காத் நிதியத்தை நிறுவியதுடன், பள்ளிவாசலுக்கான நிர்வாகக் கட்டடத்தையும் பெற முனைப்புடன் செயற்பட்டவர். கடந்த சுனாமி காலத்தில் வெகுவாக பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது கிராமத்தை கட்டியெழுப்ப ஜும்மாப் பெரிய பள்ளிவாசல் தலைவராக அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருந்தார். இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் பல்கலைக்கழக வேந்தராக இருந்தவரும், கிழக்கின் முதல் முஸ்லிம் பட்டதாரியாகவும் வெளியேறிய தேசபந்து ஜெஸிமா இஸ்மாயிலுடன் இணைந்து கல்விச்செயலாற்றிய இவரின் சேவைகளை ஜும்மாப் பெரியபள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம், மௌலவி எம்.எஸ்.எம்.நுஹ்மான் ஆகியோர் நினைவுபடுத்தி இங்கு உரையாற்றினர்.

இங்கு கருத்து தெரிவித்த டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல், பள்ளிவாசல் நிர்வாகிகள் எல்லோரும் கலந்துகொண்டு என்னை கௌரவித்தமையை மகிழ்ச்சியுடன் நோக்குகிறேன். நல்லவர்களை ஒரு சமூகம் பாராட்டாமல் விட்டால் நல்லவர்கள் உருவாகாமலே சென்றுவிடுவார்கள் எனும் கூற்றுக்கு அமைய சாதனையாளர்கள், கௌரவிக்க தகுதியானவர்களை நாம் உரிய நேரத்தில் கௌரவிக்க வேண்டும். எனது சமூகசேவை காலங்களில் நிறைய விடயங்களை இந்த சமூகத்திற்காக செய்திருக்கிறேன். அவைகளை நினைத்துப் பார்க்க இது நல்ல சந்தர்ப்பமாக பார்க்கிறேன் என்றார்.

நீடித்த ஆயுளுக்கும், நிம்மதியான வாழ்வுக்குமான துஆ பிரார்த்தனையை மௌலவி அஸ்ஸெக் எம்.எஸ்.எம். நுஹ்மான் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் சாய்ந்தமருது ஜும்மாப் பெரிய பள்ளிவாசலின் செயலாளர் எம்.ஐ.எம்.மன்சூர், பொருளாளர் ஏ.ஏ.சலீம் உட்பட மரைக்காயர் சபையினர், நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எந்தவொரு நிபந்தனையுமின்றி ஐக்கிய மக்கள் சக்தி ஒத்துழைக்கும்

## முட்டாள்தனமான முடிவுகளை அரசாங்கம் உடனடியாக மீளப்பெற வேண்டுமெனவும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் வலியுறுத்து

நாட்டின் ஜனநாயக ரீதியிலான மக்களின் எதிர்பார்ப்புகளையும் நாட்டின் அமைதியையும் ஜனநாயக உரிமைகளையும் மதிக்காது, பாசிச பாணியிலான இந்த வேலைத்திட்டத்திற்கு ஆலோசனை மற்றும் தலைமைத்துவம் வழங்கும் பதில் ஜனாதிபதி என கூறிக்கொள்ளும் ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க எடுக்கப்படும் அனைத்து விதமான நடவடிக்கைளுக்கு எந்தவொரு நிபந்தனையுமின்றி அனைத்து ஜனநாயக சக்திகளுடன் ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனையின்றி ஒன்றிணைந்து செயற்படும் என உறுதியாகக் கூறுகிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நேற்று வெளியிட்ட விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று (13) தனது பதவியை இராஜினாமா செய்வதாக சபாநாயகருக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் அண்மையில் ஊடக அறிக்கைகள் மற்றும் விசேட அறிவிப்புகள் மூலம் நாட்டுக்கு அறிவித்திருந்தார். நாடு முழுவதும் எழுந்த மக்கள் போராட்டத்தின் முக்கிய கோரிக்கையாகவும் அது அமைந்திருந்தது. ஜனாதிபதியை நியமிப்பதற்கான பிரேரணையை முன்வைப்பதற்காக நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான திகதிகளை அண்மையில் கூடிய கட்சித் தலைவர்கள் தீர்மானித்திருந்தனர்.



அவ்வாறு இருக்கையில், இன்று (13) ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும், பிரதமர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்திருப்பது மக்களின் அபிலாஷைகளை ஒட்டுமொத்தமாக மீறுவதுடன், வெளியிடப்பட்ட அறிக்கைகளில் பாரிய நம்பிக்கை மீறுவதாகவும் அமைந்துள்ளது. பதவியை இராஜினாமா செய்வதாக வாக்குறுதியளித்துவிட்டு தொடர்ந்தும் ஜனாதிபதி பதவியில் நீடிப்பதற்கு வழிவகுத்த வண்ணம் பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்து கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளும் நடவடிக்கை மக்களின் விருப்பத்திற்கு விடும் நேரடியான சவாலாகும்.

இத்தருணத்தில் அவசரகால சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி நிராயுத பாணியான மக்களின் போராட்டத்தை முடக்க அரசாங்கம் முயல்கிறது என்பது இதன்மூலம் தெளிவாகிறது. இந்த சட்டவிரோத முயற்சியால் நாட்டில் பாரிய அனர்த்தம் ஏற்படுவதை தடுக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுகிறோம். இது நாட்டை அமைதிப்படுத்துவதற்கான முயற்சியல்ல, நாட்டை மேலும் சீர்குலைத்து தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் ராஜபக்ஷர்கள் மேற்கொள்ளும் முயற்சி என்பது தெளிவாகிறது. இந்த முயற்சி ஜனநாயகத்திற்கு எதிரானது போலவே சர்வாதிகாரத்தின் நீட்சி என்பதையும் வலியுறுத்துகிறோம்.

இந்நேரத்தில், அனைத்து ஜனநாயக சக்திகளும் அனைத்து வேறுபாடுகளையும் ஒதுக்கி வைத்து விட்டு, இந்த சட்டவிரோத செயல்முறைக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். நாட்டின் மக்கள் இயல்பு வாழ்வையும், அரசியல் ஸ்திரத்தன்மையையும், பொருளாதார நெருக்கடியையும் மேலும் தீவிரப்படுத்தியுள்ள இந்த முட்டாள்தனமான முடிவு மற்றும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் உடனடியாக மீளப்பெற வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

நாட்டின் ஜனநாயக ரீதியிலான மக்களின் எதிர்பார்ப்புகளையும் நாட்டின் அமைதியையும் ஜனநாயக உரிமைகளையும் மதிக்காது பாசிச பாணியிலான இந்த வேலைத்திட்டத்திற்கு ஆலோசனை மற்றும் தலைமைத்துவம் வழங்கும் பதில் ஜனாதிபதி என கூறிக்கொள்ளும் ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க எடுக்கப்படும்.

அனைத்து விதமான நடவடிக்கைளுக்கு எந்தவொரு நிபந்தனையுமின்றி அனைத்து ஜனநாயக சக்திகளுடன் ஐக்கிய மக்கள் சக்தி நிபந்தனையின்றி ஒன்றிணைந்து செயற்படும் என உறுதியாகக் கூறுகிறோம்.

# ஜூலை மாதத்தில் மாத்திரம் 27,900 பேர் தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாட்டுக்கு பயணம்

நடப்பாண்டில் ஜூலை மாதத்தில் மாத்திரம் தொழில்வாய்ப்புக்காக 27 ஆயிரத்து 937 பேர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதுடன், அவர்களில் 18 ஆயிரத்து 83 பேர் சுய முயற்சியில் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

நடப்பாண்டின் ஜனவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் முதல் வாரம்வரை தொழில்வாய்ப்புக்காக மொத்தமாக ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 179 பேர் வரையில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். சுயமான தொழில் வாய்ப்புக்காக ஒரு இலட்சத்து 767 பேர் மற்றும் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களினூடாக 55 ஆயிரத்து 411 பேர் வெளிநாடு சென்றுள்ளனர்.

ஜனவரி மாதம் முதல் இதுவரை அநேகமானவர்கள் தொழில் வாய்ப்புக்காக குவைட்டுக்குச் சென்றுள்ளதுடன், 39 ஆயிரத்து 216 பேர் குவைட்டுக்குச் சென்றுள்ளனர். மேலும் கட்டாருக்கு 36 ஆயிரத்து 229 பேரும், சவுதி அரேபியாவுக்கு 26 ஆயிரத்து 98 பேரும், தென் கொரியாவுக்கு 3 ஆயிரத்து 219 பேரும், ஜப்பானுக்கு 2 ஆயிரத்து 576 பேரும் தொழில் வாய்ப்புக்காக சென்றுள்ளனர்.

ஜனவரி மாதம் முதல் இது வரையில் தொழில் வாய்ப்புக்காக 46 ஆயிரத்து 992 பேரும், சாதாரண தொழில்வாய்ப்புக்காக 49 ஆயிரத்து 923 பேரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன், வீட்டு வேலைக்காக 38 ஆயிரத்து 871 பேரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.



எசல போய தினத்தை முன்னிட்டு சீன இலங்கை நட்புறவு அபிவிருத்திச் சங்கத்தினால் நேற்று (13) களனி விகாரையில் தானம் வழங்கிவைக்கப்பட்டது.

(படப்பிடிப்பு - லலித்பெரேரா)

# அரசியலமைப்புக்கு முரணான ரணிலின் உத்தரவை ஒருபோதும் செவிமடுக்கக் கூடாது

## சரத் பொன்சேகா எம்.பி. வேண்டுகோள்



பாதுகாப்பு படையினர், ரணில் விக்ரமசிங்க வழங்கும் சட்டவிரோத அரசியலமைப்புக்கு முரணான உத்தரவை செவிமடுக்கக்கூடாது பின்பற்றக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் எட்மிரல் சரத் பொன்சேகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது முகநூல் பதிவில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். சட்டவிரோதமாக அதிகாரங்களை கைப்பற்றிய ரணில் ஜனாதிபதியின் அதிகாரங்களை சட்டவிரோதமாக கைப்பற்றியுள்ளார். தன்னை பதில் ஜனாதிபதியாக அறிவித்துள்ளார்.

துப்பாக்கி பிரயோகத்தினை மேற்கொள்வதற்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் வதந்திகள் பரவுகின்றன.

முப்படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் உருவாகும் கடும் ஆபத்து காணப்படுகின்றது.

ஆயுதம் ஏந்தாத அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொள்ள வேண்டாம் எனவும் ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்டத்தை பின்பற்றும் ஒழுக்கமான இராணுவம் என்ற வகையில் ஆயுதங்களை உயர்த்துமாறும் நான் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றேன். இந்த தருணத்தில் நான் போராட்டக்களத்தில் நிற்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டுபாய் - கட்டுநாயக்க விமான சேவை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

டுபாய் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையங்களுக்கு இடையிலான பிலை டுபாய் நிறுவனத்தின் விமான சேவைகள் ஜூலை மாதம் கடந்த 10ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. இலங்கையில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார அமைதியின்மை காரணமாக தனது விமான சேவைகளை இடைநிறுத்த பிலை டுபாய் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், விமான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்த பயணிகளுக்கு பணத்தைத் திருப்பித் தருவதாக விமான நிறுவனம் கூறியுள்ளதுடன், இலங்கையின் நிலைமையை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போலியான இணைப்புகளைப் பயன்படுத்தி தனிப்பட்ட தகவல்கள் திருட்டுப்போகும் ஆபத்து

## அவதானமாக இருக்குமாறு சேர்ட் நிறுவனம் அறிவிப்பு

SRI LANKA CERT|CC

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியுடன், போலியான விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு கணினி அவசர தயார்நிலை குழு ஒருங்கிணைப்பு மையம் (CERT|CC) பொது மக்களை எச்சரித்துள்ளது.

போலியான இணைப்புகளைப் பயன்படுத்தி உங்கள் தனிப்பட்ட தகவல்களைத் திருடுவது தொடர்பான பல சம்பவங்கள் குறித்து CERT|CC குழுவிடம் புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குற்றவாளிகள் எரிபொருளுக்கான டோக்கனைப் பதிவுசெய்து, போலியான பதிவுச் செயல்பாட்டின்போது முக்கியமான தனிப்பட்ட தகவல்களை (தொலைபேசி எண்கள், வாகனப் பதிவு எண்கள், அடையாள அட்டை எண்கள், வங்கிக் கணக்கு விவரங்கள் போன்றவை) திருடுவதாகவும் பின்னர் திருடப்பட்ட தனிப்பட்ட தகவல் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் சில சந்தர்ப்பங்களில் சமூக ஊடகங்களில் போலி கணக்குகளை உருவாக்குவதற்கும் பயன்படுத்தப்படுவதாக தெரிவித்துள்ளது.

# அமெரிக்க தூதரகத்தின் சேவைகள் இரு நாட்களுக்கு தற்காலிகமாக முடக்கம்

UNITED STATES EMBASSY COLOMBO

இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தமது சேவைகளை அடுத்த இரண்டு நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

மிகுந்த எச்சரிக்கையுடன், தூதரகம் புதன்கிழமை பிற்பகல் சேவைகளையும் (அமெரிக்க குடிமக்கள் சேவைகள் மற்றும் என்.ஐ.வி. பாஸ்பேக் மற்றும் வியாழக்கிழமையின் அனைத்து தூதரக சேவைகளையும் இரத்து செய்வதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஏற்படும் எந்தவொரு சிரமத்திற்கும் தாம் மன்னிப்பு கேட்டுக்கொள்வதாகவும், மேலும் இரத்து செய்யப்பட்ட அனைத்து சந்திப்புகளையும் மீண்டும் திட்டமிடவுள்ளதாகவும் அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆறு நாட்களாக நாட்டில் நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் காரணமாக நாட்டில் அசாதாரண சூழல் ஏற்பட்டுள்ளது.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மாலைதீவில் அடைக்கலம் கொடுக்கப்பட்டமைக்கு எதிராக அந்நாட்டிலுள்ள இலங்கையர்கள் மாலைதீவு அரசுக்கு எதிராக நேற்று (13) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பி.எஸ்.சி) - நீர்கொழும்பு கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

கொச்சிக்கடையில் பதிவு அலுவலகமொன்றினை வைத்திருக்கும் WV13410 என்ற வியாபார பதிவு இலக்கத்தைக் கொண்ட P.B.S ஸ்டீல் என்ற பெயரில் கீர்த்தி நாமம். மிகுந்த கூட்டு வியாபாரமொன்றினை செய்து கொண்டு போகும் கொச்சிக்கடையில் வசிக்கும் எமில்: மனோராஜ் பெர்னாண்டோபுள்ளே மற்றும் நயினாமடம் கிழக்கைச் சேர்ந்த அருண பிலசிதாஸ் கிஹான் பெர்னாண்டோ ஆகியோர் கடப்படுடையவர்களாகவும்/ ஈடுவைத்தவர்களாகவும் செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு K.C. கொடிதுவக்குவினால் 2018.10.03 ஆம் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஈட்டுமுறி இலக்கம் 210 இன் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால்,

**2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி மு.ப, 11.30 மணிக்கு:**
**செலான் வங்கி பீ.எல்.சி. யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குற்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல: விற்பனையில் விற்கப்படும்**
**அட்டவணை**

மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் மாரவில பதிவுப்பிரிவிற்குள் வென்னப்புவ மாநகர சபை மற்றும் பிரதேச சபை செயலாளர் பிரிவில் நய்னமடம் கிழக்கு-485 கிராம சேவகரின் எல்லைக்குள் நெய்னாமடத்தில் அமைந்துள்ள பேருவே வத்த அல்லது கதுருகஹவத்த என அழைக்கப்படும் மரங்கள்,பயிர்செய்கைகள், மண் முழுவதும் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் உள்ளடக்கிய காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ்.எஸ். சுமித் ஏ. பெர்னாண்டோவினால் வரையப்பட்ட 2018.07.19திகதியிடப்பட்ட 6785 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டின் 1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையாறுக்கப்பட்ட காணிதுண்டின் ஒரு ரூட் எட்டு தசம் எட்டு மூன்று பேர்ச்சஸ் (ஏ0.ரூ1.பே 8.83) விஸ்தீரணமான காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி-** கொச்சிக்கடை நகரத்திலிருந்து சிலாபம் வீதியில் சுமார் 4.5 மீற்றர் துரம் சென்று பக்கத்திலுள்ள நைனாமட தேவாலயத்திற்குத் திரும்பி சுமார் 300 மீற்றர் துரம் விக்சோப்பா தேவமாதா வீதியில் (பி.ச தாரிடப்பட்ட வீதி) சென்றதும் இடது பக்கத்தில் இக் காணி அமைந்துள்ளது.(தேவாலயத்திற்கு பின்னால்)

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2021.02.12 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2021,01.13 ஆம் திகதி சிலோன் டுடே, தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%: (2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும். இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பனத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

**பிரதான முகாமையாளர். (சட்டம்), செலான் வங்கி பீஎல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011/-2456479,011-2456473**

மேலேயுள்ள ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ உரிய அதிகாரங்களும் வங்கிக்குண்டு.

சந்திமா பிரியதஷனி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9–i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி இலக்கம்: 071 4318252, 011– 2173282

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# இ.போ.ச. சாலைக்கு பீப்பாய்களில் 300 லீற்றர் பெற்றோல் விநியோகம்






(வவுனியா நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை ஊழியர்களின் நலனை கருத்திற்கொண்டு அரசாங்க அதிபரின் உத்தரவின்பேரில் பீப்பாய்களில் 300 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டது

வவுனியா இலங்கை போக்குவரத்து சாலையில் 161 தொழிலாளர்கள் கடமையாற்றுவதுடன், அவர்களது தனிப்பட்ட வாகனங்களில் கடமைக்கு செல்வதற்கு எரிபொருள் இன்மையினால் பஸ் சேவைகளை சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு அசௌகரியங்களுக்குமுகங்கொடுத்திருந்ததுடன், கடந்த சிலதினங்களுக்கு முன்னர் எரிபொருள் கோரி போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்

இ.போ.ச. வவுனியா சாலையினால் அரசாங்க அதிபருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக 161 தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கென 400 லீற்றர் பெற்றோல் வழங்குமாறு அரசாங்க அதிபர் அனுமதி வழங்கியிருந்தார்.

இந்நிலையில், வைத்தியசாலை முன்பாகவுள்ள ஐஓசி எரிபொருள் நிலையத்தில் நேற்று முன்தினம் (12) இ.போ.ச. வவுனியா சாலைக்கு பீப்பாய்களில் 300 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டிருந்தது.

இ.போ.ச. வவுனியா சாலை சாரதிகள், காப்பாளர்கள், பொறியியலாளர்கள், உத்தியோகத்தர்கள் செட்டிகுளத்திலிருந்து அல்லது அதற்கு அண்மையிலுள்ள பிரதேசத்திலிருந்து வருகின்றனர். அது மட்டுமல்லாமல் சாளம்பைக்குளம், பம்பைமடு, நாகர் இலுப்பைக்குளம், ஓமந்தை லைக்கா கிராமம், பூணாவா, இராசேந்திரகுளம், வீரபுரம், பூவரசன்குளம், சிதம்பரபுரம், முருகனூர் போன்ற இடங்களிலிருந்து வருகின்றார்கள். இதைவிட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய இடங்களிலிருந்தும் அதைவிட கிழக்கு மாகாணத்திலிருந்தும் வந்து கடமை செய்கின்றார்கள்.

அத்துடன், பாடசாலை சேவை, தபால் சேவை, பொது மக்களுக்கான சேவை மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் சேவை இ.போ.ச. வவுனியா சாலையினர் முன்னெடுத்துள்ளனர். இதனை கருத்திற்கொண்டே பீப்பாய்களில் எரிபொருள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் சீரான முறையில் 1000 பேருக்கு லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகம்




(வவுனியா நிருபர்)

ஒரு மாதத்திற்கு பின்னர் வவுனியாவில் 1000 பேருக்கு சீரான முறையில் லிட்ரோ சமையல் எரிவாயு நேற்று (13) வழங்கப்பட்டது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள மைதானத்தில் வைத்து குறித்த சமையல் எரிவாயு வழங்கப்பட்டது.

லிட்ரோ நிறுவனத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து அங்கு வருகை தந்திருந்த மக்கள் 1000 பேருக்கு சீரான முறையில் எந்தவித குழப்பங்களுமின்றி இலக்க சிட்டைகளை வழங்கி, பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மின்சார பட்டியல்கள் பதிவுசெய்யப்பட்டு சமையல் எரிவாயு 1000 பேருக்கு விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியாவில் ஒரு மாதத்திற்கு பின்னர் லிட்ரோ சமையல் எரிவாயு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைநகர் கடற்பகுதியில் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 06 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க புறப்பட்ட மீனவர்களில் ஆறு பேர் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைத்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கடற்படையினரால் கடந்த திங்கட்கிழமை (11) கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 06 தமிழக மீனவர்களும் நேற்று முன்தினம் (12) நீரியல்வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.



அதனையடுத்து நீதவான் 06 மீனவர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# கோப்பாயில் திருட்டு – கொள்ளையில் ஈடுபட்டவர்கள் 10 பேர் கைது

(யாழ். நிருபர்)

கோப்பாய் பொலிஸ் பிரிவில் மூன்று வீடுகளில் திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்ட முதன்மை சந்தேக நபர் மற்றும் நகைக்கடை உரிமையாளர், உடந்தையாக இருந்தவர்கள் என 10 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மே, ஜூன் மாதங்களில் கோண்டாவில் மஞ்சத்தடியில் இரண்டு வீடுகளை உடைத்து தங்க நகைகள், பெறுமதிவாய்ந்த அலைபேசிகள், சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் சைக்கிளைத் திருடியமை மற்றொரு வீட்டில் பெண் அணிந்திருந்த தங்க நகை அறுக்கப்பட்டிருந்தமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவங்கள் தொடர்பில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த முதன்மை சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் உடந்தையாக இருந்தவர்கள் அடகுவைத்துக் கொடுத்தவர்கள் என கிளிநொச்சி, சுன்னாகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் நகைக்கடை உரிமையாளர் என மேலும் 9 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன் திருட்டப்பட்ட - கொள்ளையிடப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முதன்மை சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையாகி தொடர்ச்சியாக கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபட்டு வந்ததுடன், பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவர் என்று பொலிஸார் கூறினர்.

# பெருந்தோட்ட மக்களின் காணியுரிமையும் கண்ணாமூச்சியாடும் அரசியல்வாதிகளும்



• எம். செல்வராஜா

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு தமக்கென வீட்டுரிமையும், காணியுரிமையும் வழங்கப்பட வேண்டியது அடிப்படைத் தேவையும் அவசியமுமாகும். இதன்மூலமே, அம்மக்கள் பூரணத்துவம் அடைவர். இதுவரை கண்ணாமூச்சி – பூச்சாண்டி விளையாடிய அரசியல், தொழிற்சங்கவாதிகள் இனியும் அவ்வகையில் செயல்பட முடியாது. நாட்டில் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தில், அரசியலில் மாற்றம் உருவாகியதுபோன்று, மீண்டும் ஒரு மக்கள் போராட்டத்தால் மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு தமக்கென வீட்டுரிமையும், காணியுரிமையும் பெற ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் இருநூறு வருடங்களை அண்மித்தபோதிலும், அவர்களுக்கு வீடு மற்றும் காணியுரிமைகள் வழங்கப்படவில்லை. பத்து வருடங்கள் காணியொன்றிலோ, வீடொன்றிலோ எவராவது இருப்பார்களேயானால், அக்காணியோ, வீடோ அவர்களுக்கு சொந்தமாகுமென்ற, நிலை இருந்தும் பெருந்தோட்ட மக்களுக்கு அந்நிலை காணப்படவில்லை. அம்மக்கள் இலங்கைப் பிரஜைகளாக, இலங்கைக்கு அந்நிய செலவாணியைப் பெற்றுக் கொடுத்தவர்களாக இருந்தும் அம்மக்கள் மாற்றாந்தாய் போக்கிலேயே கணிக்கப்பட்டு வருகின்றனர்.

நாட்டின் தகவல் அறியும் சட்டத்தின் மூலம், மலையப் பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு குறித்து பெறப்பட்ட தகவல்களில், 1994ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டு வரைக்குமான காலப்பகுதியில் 20 ஆயிரத்து 792 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவற்றில், ஆயிரத்து 549 வீடுகள் முழுமையாகப் பூர்த்தியடையவில்லை. இந்திய அரசின் உதவியால் 3 ஆயிரத்து 820 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகையில், அத்தகவலுக்கமைய 24 ஆயிரத்து 612 வீடுகளே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகையிலான ஆமை வேகத்திலேயே மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தினால் 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடனாக 40 ஆயிரம் ரூபாவும், நிவாரணமாக 45 ஆயிரத்து இருநூறு ரூபாவுமான சுயமுயற்சி வீடமைப்பு என்றடிப்படையில், பெருந்தோட்ட மக்களுக்கு உறுதிகள் இல்லாமல் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

அத்துடன், பெருந்தோட்ட லயக் குடியிருப்புகளை அம்மக்களுக்கு சொந்தமாக்கும் வேலைத்திட்டத்திற்கமைய நுவரெலியாவில் 1994ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி குறிப்பிட்ட குடியிருப்பிற்கான உரிமைக் கையேடுகள் வழங்கப்பட்டன. இதன்பின்னர் 2015ஆம் ஆண்டு பண்டாரவளையில் பசுமைப்பூமி என்ற வகையில் குறிப்பிட்ட சிலருக்கு காணி உரிமைக் கையேடுகள் வழங்கப்பட்டன. காலத்திற்குக்காலம் இவ்வகையில், உரிமைக் கையேடுகள் வழங்கப்பட்டபோதிலும், அவ்வுரிமைக் கையேடுகள் முறையாகவும், பயன்பெறக்கூடியதாகவும் அமையவில்லை. இதனை ஒரு ஏமாற்று செயல்பாடுகளாகவே கருதவேண்டியுள்ளது.

ஆனால், பெருந்தோட்ட மக்கள் சாராதவர்களுக்கு கல்லோயா, மகாவெலி, மாதிரிக் கிராமங்கள், கம் உதாவ, சுவர்ணபூமி, செவன என்ற பல்வேறு பெயர்களில் உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பெருந்தோட்ட மக்களுக்கு அவ்வகையான உரிமைச் சான்றிதழ்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

பெருந்தோட்ட மக்கள் இலங்கைப் பிரஜைகளாக இருந்தபோதிலும், அம் மக்கள் ஏனைய சமூக மக்களைபோன்று காணி, வீடு ஆகிய உரிமைகளை அனுபவிக்க முடியாதவர்களாகவே இதுவரையில் இருந்துவருகின்றனர். ஆரம்பகால வாழ்க்கை முறைகளைபோன்று அடக்கப்பட்டவர்களாக, ஐந்து பரம்பரையாளர்களாக தோட்ட லயக்குடியிருப்புகளிலேயே, ஒன்றிற்கு மேற்பட்ட குடும்பத்தினர்களாக இருந்துவருகின்றனர்.

பதுளையில் கூடிய திட்ட வரைபு ஒன்றியத்தின் கூட்டத்தின்போது, மலையகப் பெருந்தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அம்மக்கள் எதிர்நோக்கும் இன்னோரன்ன பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதற்கும் பெரும்பான்மை மக்களின் பூரண ஆதரவினையும், பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று முன்வைக்கப்பட்டது. அந்த முன்மொழிவினை கூட்டத்தில் அனைவருமே ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் சிறுபான்மையினரைச் சேர்ந்த குறிப்பிட்ட சிலரும் ஏனையவர்கள் பெரும்பான்மையினர் பெருமளவிலும் கலந்துகொண்டிருந்தனர். பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் பெரும்பான்மையின மக்களுக்கு தெளிவூட்டி, அவர்களையும் இணைத்துக்கொண்டு, முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய நிலை ஆரோக்கியமானதோர் சூழலையே ஏற்படுத்தும். இந்நிலை தொடர வேண்டும்.

பதுளை மாவட்டத்தில் பசறை, தெமோதரை, ஹப்புத்தளை ஆகிய மூன்று இடங்களில் பெருந்தோட்டக் காணிகளை அபகரிக்கும் செயல்பாடுகளினால், சுமார் 102 தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்கள் செய்வதறியாத நிலையினை எதிர்நோக்கியுள்ளன. மேலும், ஹப்புத்தளை நீட்வூட் தோட்ட அரச பாடசாலையையும், அகற்றக் கோரப்பட்டுள்ளது. அகற்ற மறுப்பின் பாடசாலை அமைந்துள்ள காணிக்கு பணம் செலுத்த வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோணகலை பெருந்தோட்ட பசறைப் பிரிவில், இரு தொழிலாளர் குடும்பங்கள் குடியிருக்கும் தனிக்குடியிருப்புகளிலிருந்து அவர்களை வெளியேறுமாறு பசறை பிரதேச செயலகம் ஊடாக உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கான அறிவித்தல் பதாகைகளையும், பசறை பிரதேச செயலகம் குறிப்பிட்ட குடியிருப்புகளின் சுவர்களில் ஒட்டியுள்ளன.

அரசின் வேலைத்திட்டமொன்றிற்கமைய சேவாபியச என்ற சேவை நிலையம் அப்பகுதியில் அமையவிருப்பதினால், குறிப்பிட்ட இரு தனிக்குடியிருப்புகளிலிருந்து தொழிலாளர் குடும்பங்களை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட இரு தனி வீடுகளும், பெருந்தோட்ட கூட்டுறவு வீடமைப்புத் திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டதாகும். இக் குடியிருப்புகளிலிருந்து தொழிலாளர் குடும்பங்களை வெளியேற்றும் பட்சத்தில், அவர்கள் குடியிருப்பதற்கு வேறு வீடுகளோ, லயக்குடியிருப்புகளோ இல்லாதுள்ளன.

தெமோதரை – மீறியகல பெருந்தோட்டப் பிரிவில் இரு லயக்குடியிருப்புகளை அகற்றி, அவ்வழியாக பெரும்பான்மையினத்தாரைச் சேர்ந்த குடும்பமொன்றிற்கு பாதை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்ல பிரதேச செயலாளரே, மேற்படி செயல்பாட்டினை மேற்கொண்டு, குறிப்பிட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு எதிராக பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகளும் தாக்கல் செய்துள்ளார்.

இதுபோன்ற பல்வேறு சம்பவங்கள் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் ஆங்காங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகையினால், பெருந்தோட்டங்களில் இருநூறு வருடங்களை எட்டியுள்ள பெருந்தொட்ட மக்கள், தமக்கான எதிர்காலம் கேள்விக்குறியாகியிருப்பதை எண்ணி, செய்வதறியாத நிலையில் உள்ளனர்.

பெருந்தோட்ட மக்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமைகள் கிடைக்கப்பெற்று, உரிமைச் சான்றிதழ்களும் கிடைத்திருப்பின் அம்மக்கள் இதுபோன்ற பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய அவசியமில்லை.

பெருந்தோட்டப் பகுதிகள், கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில், பல்வேறு வேலைத்திட்டங்களுக்கேன்று சுவீகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனால், பெருந்தோட்டக் காணிகள் குறைவடைந்து செல்கின்றன. பெருந்தோட்டங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்களும் வெகுவாகக் குறைவடைந்துவிட்டனர்.

பெருந்தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுரிமைகளைப் பற்றிய பிரச்சினைகளை நிவர்த்திசெய்ய, தற்போதைய நிலையிலாவது உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். பெருந்தோட்ட மக்களுக்கென 20 பேர்ச் காணியுடன் வீட்டிற்கான உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டியதும் அவசியமாகும். தொடர்ந்தும், மலையக அரசியல், தொழிற்சங்கத் தலைமைகள், சமூக மேம்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து தேசிய கொள்கைத்திட்டமொன்றினை வகுத்து பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வினை ஏற்படுத்த வேண்டும். தவறின், மீண்டும் ஒரு மக்கள் போராட்டம் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது.

மலையகம் என்பது பெருந்தோட்ட மக்களின் இருப்பாகும். இதனை எவருக்கும் விட்டுக்கொடுக்கக்கூடாது. இனியும் மலையக மக்கள் ஏமாற்றப்பட்டது போதும். அவர்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமைகள் வழங்கப்படல் வேண்டும். தவறின் சாதுமிரண்டால் காடு செல்லாது என்பதற்கமைய, அம்மக்கள் கொதித்தெழுவதற்கு முன் அம்மக்களுக்கான காணி மற்றும் வீட்டுரிமைகளை பெற்றுக் கொடுப்பதுடன், அதற்கான உரிமைச் சான்றிதழ்களும் கிடைத்தாக வேண்டும். அம்மக்களின் வாக்குப் பலத்தினால் சுகபோகம் அனுபவித்துவரும் அரசியல் தொழிற்சங்கவாதிகள், உரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் அவசியமாகும். அந்த அரசியல் தொழிற்சங்கவாதிகள் பெருந்தோட்ட மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டிருப்பது ஜீரணிக்க முடியாத ஒன்று. இதனை அரசியல் தொழிற்சங்கவாதிகள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

★★★★★

# 30 வருட காலமாக அதிகார பேராசைக்காக காத்திருந்த ரணில் பதவி விலகுவார் என்பதை எதிர்பார்க்க முடியாது

## அவ்வாறான சூழ்நிலையை அவருக்கு ஏற்படுத்த வேண்டும் என்கிறார் சாணக்கியன்



30 வருடகாலமாக அதிகார பேராசைக்காக காத்திருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி விலகுவார் என்பதை எதிர்பார்க்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுடன் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "விசேடமாக போராட்டகாரர்கள் முன்வைத்துள்ள யோசனையில் முதலாம், (கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகல்), இரண்டாம் (ரணில்-அமைச்சரவை பதவி விலகல்) யோசனைகளை செயற்படுத்தாமல் மூன்று மற்றும் நான்காவது விடயங்களை செயற்படுத்த முடியாது.

பொதுஜன பெரமுன கட்சிக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள காரணத்தினால் எதிர்க்கட்சிக்கு எதனையும் செயற்படுத்த முடியாத நிலையில், போராட்டக்காரர்களின் ஒன்றிணைவினால் ஜனாதிபதிக்கு பதவி விலக நேரிட்டுள்ளது.

கடந்த 30 வருடகாலமாக அதிகார பேராசைக்காக காத்திருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி விலகுவார் என்பதை எதிர்பார்க்க முடியாது.

ஆகவே தொடர்ந்து போராட்டத்தில் ஈடுப்பட்டால் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியுமா என்பது சந்தேகத்திற்குரியது. ஏனெனில் போராட்டத்தினால் லிபியாவில் ஸ்தீரமான அரசாங்கத்தை உருவாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே ஜனாதிபதி பதவி விலகியதை தொடர்ந்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி விலகாவிடின் அவர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்பார் அதனை தடுக்கமுடியாது.

ஆகவே, அவர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்னர், அதனை தடுக்கும் வகையில் அனைவரும் ஒன்று திரள வேண்டும். ஏனெனில் இவர் வெட்கமற்ற நபர் என்பதை நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளேன்.

இவரது வீடு எரிக்கப்பட்டுள்ளமை கண்டனத்திற்குரியது. இருப்பினும் அச்சம்பவம் சந்தேகத்திற்குரியது. பதில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றால் பொதுஜன பெரமுனவிற்கும் அது பிரச்சினையாக அமையும். அரசாங்கத்திற்குள் திருடர்கள் பலர் உள்ளார்கள்.

பொதுஜன பெரமுன தமது விருப்பத்திற்கமைய பிரதமர், ஜனாதிபதி ஆகியோரை தெரிவுசெய்ய கூடும், ஆகவே ஜனாதிபதி பதவி விலகலுடன், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பதவி விலகும் நிலையை ஏற்படுத்தவேண்டும்.

பதவியேற்றதை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவது சாத்தியமற்றது. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதவி விலக்கும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பெரும்பாலான வேட்பாளர்கள் மக்கள் முன் செல்லமுடியாது

## தேர்தல் நடத்துவதற்கும் கால அவகாசம் தேவையென்கிறார் ஆணைக்குழுவின் தலைவர்

(நமது நிருபர்)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு முடியாது என்றும் ஆகக்குறைந்தது நான்கு மாத கால அவசாகம் தேவை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

மேலும் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பலர் மக்கள் மத்தியில் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தல் நடத்துவது தொடர்பில் பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன. எனினும் மக்களின் அடிப்படைத் தேவைகள் கவனிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மக்கள் மத்தியில் செல்ல முடியாதுள்ளது. மக்களின் விரக்தியே இதற்குக் காரணமாகும். இதனையும் பரிசீலனை செய்யவேண்டும்.

பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக பெரும்பாலான உறுப்பினர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிடத் தயங்குவார்கள்.

அத்துடன் நிதிப் பற்றாக்குறையும் உள்ளது. தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் அண்ணளவாக 10 பில்லியன் ரூபா செலவிடப்பட வேண்டும். எரிபொருள் பற்றாக்குறை காரணமாக போதுமானளவு டீசல், பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியும் என நாம் நினைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# மொனராகலையில் சத்தியாக்கிரக போராட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் அவர்களின் பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தி மொனராகலை பிரதேசத்தில் இளைஞர் யுவதிகள் நேற்று முன்தினம் (12) முதல் நகரிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்னால் சத்தியாக்கிரக போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

கட்சி அரசியல் பேதமின்றி சிவில் அமைப்புகளின் உறுப்பினர்களும் இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்துகொண்டிருந்ததுடன், கோட்டா - ரணில் அவர்களின் பதவிகளிலிருந்து விலகும் வரை இந்த சத்தியாக்கிரக போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜுலை 09 போராட்ட சம்பவத்தால் ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட தொல்லியல் சின்னங்களுக்கு சேதம்

## திணைக்கள பணிப்பாளர் நாயகம் தகவல்



நாட்டில் கடந்த 09ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தை தொடர்ந்து ஏற்பட்ட குழப்ப நிலையினால் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட தொல்லியல் சின்னங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தொல்லியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சேதங்களுக்குள்ளான இடங்களிலுள்ள பண்டைய மற்றும் கலாசார பொருட்களுக்கு மேலும் சேதமோ அல்லது தவறு ஏற்படுவதிலிருந்து பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, சேதம் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலேயே அதிகாரிகளை அனுப்பி குறித்த இடங்களிலுள்ள பெறுமதிமிக்க பொருட்களை பாதுகாத்துக்கொள்வதற்கு முடிந்த அதிகப்பட்ச முயற்சிகளை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகை ஆகிய இடங்களை பரிசோதிப்பதற்காக பாதுகாப்பு ஜெனரல் உள்ளிட்ட அதிகாரிகள் சிலர் நேற்று முன்தினம் (12) அந்த இடங்களுக்குசென்றுள்ளனர்.

அந்த இடங்களில் இருந்த பழைய சின்னங்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படாமலிருப்பதை தடுப்பதற்காகவும், பெறுமதிமிக்கபண்டைய மற்றும் கலாசார சொத்துக்களை பாது காத்துக் கொள்வதற்காகவும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான போராட்டங்களுக்கு தலைமை தாங்கும் சிலருடன் கலந்துரையாடி சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்களின் சொத்துகள் மற்றும் தேசிய உரிமைகளாக கருதப்படும் சின்னங்கள் மற்றும் தொல்லியல் பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்துதல் மற்றும் அவற்றை திருடும் செயற்பாடுகளை நிறுத்துமாறும், அவ்வாறு செய்தால் அவ்வாறான நபர்களுக்கு எதிராக தொல்லியல் கட்டளை சட்டத்துக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தென் மாகாண ஆளுநர் கமகே இராஜினாமா



தென்மாகாண ஆளுநர் பேராசிரியர் விலி கமகே தனது பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக பதவி விலகிய பின்னர் புதிய ஜனாதிபதியிடம் தனது இராஜி னாமா கடிதத்தை அவர் கையளிக்க வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தான் ஆளுநராக நியமிக்கப்பட்டதாகவும் அவரது பதவி விலகலின் பின்னர் தொடர்ந்தும் ஆளுநர் பதவியிலிருப்பது பொருத்தமற்றது எனவும் விலி கமகே தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய ஜனாதிபதியொருவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அன்றைய தினமே இராஜினாமா கடிதத்தை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




# கொழும்புக்கான சேவை இடைநிறுத்தப்பட்டதால் பாணந்துறை ரயில் நிலையத்தில் பதற்றம்

## ஆத்திரமடைந்தோரால் சொத்துகளுக்கு சேதம்






களுத்துறையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணிக்கவிருந்த ரயில்கள் பாணந்துறை வரையில் மட்டுப்படுத்தப்பட்டதால் பயணிகள் பதற்றமடைந்ததுடன், ஆத்திரமடைந்தோரால் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது.

பிரதமரின் அலுவலகத்தினால் புகையிரத சேவைகள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய ரயில்கள் இடைநிறுத்தப்பட்டதாக பயணிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பெரும் எண்ணிக்கையிலான பயணிகள் நிர்க்கதிக்குள்ளாகினர். இதனையடுத்து ரயில் நிலையத்தில் பெரும் பதற்றம் நிலவியது. நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவை பயனளிக்கவில்லை.








முந்தல் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் தீ மிதிப்பு உற்சவத்தை முன்னிட்டு தீச்சட்டி ஏந்தும் நிகழ்வு நேற்று (13) இடம்பெற்றது.
(படங்கள் - உடப்பு நிருபர்)



# கல்முனை மாநகர சபையில் போலியான ஆவணங்களை வைத்து ஊழல் மோசடி

**தகவலறியும் சட்டத்தில் வெளிச்சத்திற்கு வந்த உண்மை**



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபையில் போலியான சீட்டுகளையும், இல்லாத நிறுவனங்களின் பெயரில் போலியான ஆவணங்களையும் தயாரித்து ஊழல், மோசடி இடம்பெற்றுவருவதாக மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் இஸட்.ஏ.நௌஷாட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில், கல்முனை மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்டதாக குறிப்பிட்டு KMC/W2/PN28/37/22 எனும் பதிவிலக்கத்தை உடைய 310 A, பாக்கியத்துஸ் ஸாலிஹாத், பெரியநீலாவணை 01 எனும் முகவரியில் நபா ஹோல்டிங்ஸ் எனும் பெயரை உடைய நிறுவனம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போலியான நிறுவனமாக காணப்படுகின்றது. அவர்கள் அலுவலக முகவரியாக காட்டியிருப்பது வெற்றுக்காணியொன்றாகும். இந்த நிறுவனத்தின் பெயரில் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களை கல்முனை மாநகர சபை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பில் கல்முனை மாநகர சபையில் தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டபோது இப்படி ஒரு நிறுவனம் கல்முனை மாநகர சபையில் பதிவுசெய்யப்படவில்லை என 2022.06.16 அன்று உத்தியோகபூர்வமாக தகவல் தரும் அதிகாரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவன பற்றுசீட்டுகளில் பதிவு செய்யப்பட்டதாக KMC/W2/PN28/37/22 எனும் பதிவிலக்கத்தை அச்சிட்டுள்ளனர். குறித்த நிறுவன பற்றுசீட்டுகளை ஆராய்ந்து கல்முனை மாநகர சபை உயரதிகாரிகள் கையெழுத்திட்டு நிதி விடுவித்துள்ளனர். இதன்மூலம் பாரியளவிலான மோசடிகள் கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுவருவது அப்பட்டமாக தெரிகிறது. ஒன்றுக்கு ஒன்று முரணான தகவல்களை வழங்கி கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுவரும் மோசடிகளை கல்முனை மாநகர அதிகாரிகள் மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றனர்.

குறித்த நபரின் ஹோல்டிங்ஸ் எனும் பெயரை உடைய நிறுவனம் கல்முனை மாநகர முதல்வரின் நெருங்கிய உறவினரின் பெயரில் இயங்கி வருவதாக அறியமுடிகிறது. இது தொடர்பில் கல்முனை பிரதேச செயலகத்தில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டபோது இப்படி ஒரு நிறுவனம் கல்முனை பிரதேச செயலகத்தில் KDS/1457 எனும் இலக்கத்தில் மு.ற.ரத்திஸ் நபா என்பவரின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக கல்முனை பிரதேச செயலக தகவல் அதிகாரி மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வித கட்டிடமோ பெயர்ப்பலகைகளோ இல்லாத நிலையில் எப்படி இது சாத்தியமாகியது. இந்த விடயத்தின் மூலம் அரசியலமைப்பு மூலம் உறுத்திப்படுத்திய இலங்கையின் சட்டம், அரச அதிகாரிகளுக்கான விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதுடன், அதிகார துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளமை அப்பட்டமாகத் தெரிகிறது.

இந்த விடயத்தின் மூலம் பொது மக்களின் பல இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை தெரியவருகிறது. கல்முனை மாநகர ஆணையாளர், கணக்காளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எனப் பலரும் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள இந்த விடயமானது மிகவும் பாரதூரமானது. அவர்களே முழுமையாக இந்த விடயத்திற்கு பொறுப்புக்கூறவேண்டியுள்ளது.

இது தொடர்பில் அண்மையில் கல்முனை மாநகர சபையில் கணக்காய்வு விசாரணை ஒன்றும் முன்னெடுக்கப்பட்டதாக அறிகிறேன். இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது யார்? - என கேள்வியெழுப்பியுள்ளார்.

## கதிர்காம பாத யாத்திரை குழுவினர் அம்பாறை மாவட்டத்திற்கு வருகை





(அம்பாறை நிருபர்)

யாழ். மாவட்டத்திலிருந்து வருகை தந்துள்ள கதிர்காம பாத யாத்திரை குழுவினர் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு ஆலயங்களையும் தரிசித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலத்திலிருந்து கடந்த மாதம் புறப்பட்ட யாழ். மாவட்ட கதிர்காம பாத யாத்திரை குழுவினர் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, பாண்டிருப்பு திரௌபதை ஆலயத்தை வந்தடைந்துள்ளனர்.

குறித்த பாத யாத்திரிகர்கள் திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு பயணம் செய்து பின்னர் மட்டக்களப்பிலிருந்து ஒன்றரை மாதத்தின் பின்னர் குறித்த ஆலயத்திற்கு வந்தடைந்ததுடன், விசேட பூஜைகளிலும் பங்கேற்றிருந்தனர். கடந்த பல வருடங்களாக பாத யாத்திரைக்கு தலைமை தாங்கி சென்ற வேல்சாமி மகேஸ்வரன் அடியார்கள் இங்குள்ள பல ஆலயங்களில் தீப ஆராதனைகளை மேற்கொண்டு தொடர்ந்து பாத யாத்திரை அடியார்கள் விசேட பூஜையில் கலந்துகொண்டனர்.

மேலும் நேற்று (13) யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து பயணித்த வேல்சாமி மகேஸ்வரன் கதிர்காம பாத யாத்திரைக் குழுவினர் தங்களது பாத யாத்திரையை அம்பாறை உகந்தைமலை முருகன் ஆலயத்தை நோக்கி ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 23ஆம் திகதி கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படவுள்ள நிலையில், அதிகளவான பாத யாத்திரை பக்தர்கள் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்தவண்ணம் உள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை எரிவாயு உள்ளிட்ட பொதுமக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற கடவுளை இம்முறை நாடி வந்துள்ளதாக பாத யாத்திரிகர்கள் குறிப்பிட்டனர்.

## சட்டவிரோதமாக ஆற்று மண் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாகாமம் பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்று மண் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் இருபது ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று சாகாமம் வீதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்று மண் ஏற்றிவந்த வாகனத்தை கடந்த திங்கட்கிழமை (11) பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

உழவு இயந்திர உரிமையாளர் ஏற்கனவே குற்றம் புரிந்த காரணத்தினாலேயே 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

உழவு இயந்திர உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு, உழவு இயந்திரமும் விடுவிக்கப்பட்டது

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆசியா கண்டமும் அதன் அமைப்பு முக்கியத்துவமும்

ஆசியா கண்டமானது புவியின் வட அரைக்கோளத்தில் கீழ்க்கரை பகுதியில் அமைந்து காணப்படுகின்றது. அது புவியியல் ரீதியாக ஐரோப்பா கண்டத்துடன் தொடர்புபட்ட ஒரு கண்டமாக காணப்படுகின்றது. புவியியல் ரீதியாக ஐரோப்பாவும் ஆசியாவும் ஒன்றாக சேர்ந்து ஒரே நிலத்திணிவில் அமைந்து காணப்படுவதால் அது யுரேசியா என்றும் அழைக்கப்படுகின்றது. யூரல் மலைத்தொடர், யூரல் நதி, கஸ்பியன்கடல், செங்கடல், மத்தியதரைக்கடல், சுயஸ் கால்வாய் ஆகியன ஆசியாவை ஆபிரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் பிரிக்கின்றன. ஆசியா கண்டமானது அகலக்கோடு 10 பாகையிலிருந்து நெடுங்கோடு 80 பாகை வரையிலும் மற்றும் கிழக்கு நெடுங்கோடு 25 பாகையிலிருந்து 180 பாகை வரையிலும் அமைந்துள்ளது.

ஆசியா கண்டமானது உலகின் மிகப்பெரிய கண்டமாக காணப்படுவதுடன், உலகின் அனைத்து காலநிலை வலயங்களையும் கொண்டதாக காணப்படுகின்றது. பல்வேறுபட்ட மனித இனங்கள் மற்றும் மனிதக் குழுக்கள், இனக்குழுக்கள் மொழிகள் மற்றும் கலாசார பல்வகைத் தன்மை கொண்டதாக காணப்படுகின்றது. பிரதான சமயங்கள் பலவற்றின் பிறப்பிடமாக ஆசியா கண்டம் அமைந்து காணப்படுவதுடன், உலகின் மிகப்பெரிய மலைத்தொடரும் அம் மலைத்தொடரில் அமைந்துள்ள மிகப்பெரிய மலைச்சிகரமும் இக் கண்டத்திலேயே அமைந்து காணப்படுகின்றது. உலகின் அதிக சனத்தொகைகொண்ட கண்டமாகவும் ஆசியா கண்டமே அமைந்து காணப்படுகின்றது.

ஆசியா கண்டத்தின் பரப்பளவு அண்ணளவாக நோக்குகின்றபோது அது ஏறக்குறைய 44.6 மில்லியன் சதுர கிலோ மீற்றர்களாகும். அது புவியின் நிலப்பகுதியில் ஏறத்தாழ 30 வீத இடத்தினையும் புவியின் மொத்த மேற்பரப்பில் 8.7 வீதத்தினையும் கொண்டு அமைந்து காணப்படுகின்றது

உலகின் மிகப்பெரிய மலைத்தொடரான இமயமலைத் தொடரானது ஆசியா கண்டத்திலேயே அமைந்து காணப்படுகின்றது. இம்மலைத்தொடரானது 8,848அடி உயரம் கொண்டது. அதில் உலகின் மிகப்பெரிய சிகரமான எவரெஸ்ட் சிகரம் அமைந்துள்ளது. அதேபோல் கடல் மட்டத்தைவிட மிகத் தாழ்வாக அமைந்துள்ள சாக்கடலானது ஆசியாவின் பகுதியிலேயே காணப்படுகின்றது. அத்துடன், உலகிலேயே அதிகமான மழை வீழ்ச்சியைப் பெறுகின்ற இந்தியாவின் மேகலயா பிரதேசத்தில் அமைந்துள்ள சீராபுஞ்சியும் உலகின் குறைந்த மழைவீழ்ச்சியைப் பெறுகின்ற பிரதேசமாக கோபி பாலைவனமும் ஆசியா கண்டத்திலேயே அமைந்து காணப்படுகின்றன.



சனத்தொகை பருமன் அடிப்படையில் நோக்குவோமாயின், உலகில் ஏறக்குறைய 60 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் ஆசியா கண்டத்திலேயே வாழ்கின்றனர். உலகின் அதிக சனத்தொகைகொண்ட நாடுகளான இந்தியா மற்றும் சீனா ஆகியனஆசியா கண்டத்திலேயே அமைந்து விளங்குகின்றன. அதேபோல் இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஜப்பான் ஆகிய சனத்தொகை அதிக நாடுகளும் இக்கண்டத்திலேயே அமைந்துள்ளன. உலகின் அதிக சனத்தொகைகொண்ட பத்து நாடுகளில் ஆறு நாடுகள் ஆசியா கண்டத்திலேயே அமைந்து காணப்படுகின்றன.

ஆசியா கண்டத்தின் சனத்தொகை அடர்த்தி நோக்கின் சதுர கிலோ மீற்றருக்கு 87 ஆகும். ஆசியா கண்டத்தில் 54 சுதந்திர அரசுகள் அமைந்துள்ளன.

ஆசியா கண்டமானது பல்வேறு இன, மத, மொழி, கலாசார பல்வகைமையைக்கொண்ட ஒரு கண்டமாக காணப்படுகின்றது. சீனாவில் மட்டும் வழக்கிலுள்ள மொழிகள் 297 காணப்படுவதாக உலகில் வழக்கிலுள்ள மொழிகள் தொடர்பான தகவல்களை வெளியிடும் Ethnologue வெளியீட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

உலகின் பல்வேறு வளர்ச்சிக்கு அடித்தளமாகவும் மனிதனுடைய நாகரீக வாழ்க்கைக்கு அஸ்திவாரம் இட்ட வகையிலும் உலகில் பல்வேறு நாகரீகங்கள் தோன்றியுள்ளன. அந்தவகையில் மெசப்பத்தேமியா குவாங்கோ சிந்துவெளி நாகரீக்கள் ஆகிய நாகரீகங்கள் ஆசியா கண்டத்திலேயே உருவாகியுள்ளன. இந்து சமயம், பௌத்த சமயம், இஸ்லாம் சமயம், கிறிஸ்தவ சமயம் ஆகிய உலகில் பிரபலமான சமயங்களின் தோற்றுவாயாகவும் இக்கண்டமானது காணப்படுகின்றது.

ஆசியா கண்டத்தில் அமைந்து காணப்படுகின்ற இமயமலையானது 2500 கிலோ மீற்றர் நீளத்திற்கும் 6,12,000 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பிலும் பரந்துள்ளது. அத்துடன், 900 மீற்றர் உயரத்தை விட மேலும் உயரம் கூடிய பல மலைச்சிகரங்கள் அமைந்து காணப்படுகின்றன. எவரெஸ்ட், ஜூங்கா மஹால், தவளகிரி, மனஸ்லு, நண்கா பாபட், அன்னபூர்ணா, நந்தா தேவி என்பனவாகும்.

உலகின் மிகப்பெரிய மேட்டு நிலங்களில் ஆசியா கண்டத்தில் அமைந்துள்ள தீபெத் சஹாரா மற்றும் மத்திய சைபீரிய மேட்டுநிலம், ஈரான் மேட்டுநிலம் என்பனவாகும். திபெத் மேட்டுநிலமானது உலகின் மிக உயரமான மேட்டுநிலமாகவும் அது கடல் மட்டத்திலிருந்து 5 ஆயிரம் மீற்றர் உயரமாக இருப்பதுடன், இமயமலை காரகோரம் அமீர் மலைத்தொடர்களால் சூழப்பட்டுள்ளது. உலகின் மிக உயரத்தில் அமைந்திருப்பதால் திபெத் மேட்டுநிலமானது உலகின் முகடு என்று அழைக்கப்படுகின்றது. உலகின் மிக ஆழமான நன்னீர் ஏரி ஆகிய பைக்கால் ஏரியானது ஆசியா கண்டத்திலேயே அமைந்துள்ளது.

ஆசியாவின் மிகக் குறைந்த வெப்பநிலை நிலவும் வர்கோயன்ஸ்க் நகரமானது ரஷ்யாவில் அமைந்துள்ளது. இங்கு வெப்பநிலையானது மைனஸ் 50 டிகிரி வரை குறைவடைந்து செல்லும். அதேபோன்று ஆசியாவின் அதிக வெப்பநிலை நிலவுவது பாகிஸ்தானில் ஜாகோபாபத் நகரத்திலாகும். இங்கு 55 செல்சியஸ் வரை வெப்பநிலையானது உயர்வடைந்து காணப்படும்

உலகின் முன்னணி பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற ஜப்பான் போன்ற நாடுகள் ஆசியா கண்டத்தில் காணப்படுகின்றது. விவசாயம் பாகிஸ்தானின் பிரதான பொருளாதார நடவடிக்கையாகும் அதேபோன்று கைத்தொழில் அதன் பிரதான நடவடிக்கையாகும். இதே மாதிரி சேவை நடவடிக்கைகளுக்கு டுபாய் பிரதானமான மார்க்கமாகவும் காணப்படுகின்றது.

**சி.குகதாசன்**
**அரசறிவியல்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்**

# மட்டு. ஆயித்தியமலை பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் பலி



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நெடியமடு கிராமத்தில் நேற்று முன்தினம் (12) இரவு காட்டு யானை தாக்கியதில் நபரொருவர் பலியாகியதாக ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயித்தியமலையில் வசித்துவரும் கோயில் போரதீவைச் சேர்ந்த (54 வயது) மு.விஜயராசா என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

உன்னிச்சை மாரியம்மன் ஆலயத்திலிருந்து ஆயித்தியமலையிலுள்ள தனது வீட்டுக்கு செல்லும்போது நெடியமடு வைத்தியசாலைக்கு முன்னால் பிரதான வீதியில் நின்ற காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே குறித்த நபர் பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவருகின்றது.

இச்சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (09ஆம் திகதி) காட்டு யானை தாக்கியதில் வயல் காவலில் இருந்த விவசாயி ஒருவர் பலியாகியதுடன், அதற்கு முன்னர் சில வாரங்களுக்கு முன் அடைச்சகல் பகுதியில் ஒருவரும் காட்டுயானை தாக்கி பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் எரிபொருள் விநியோகத்தை ஒழுங்கமைக்க பிரதேச செயலகத்தினால் புதிய செயலியொன்று அறிமுகம்

(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தினால் எரிபொருள் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் அமுலுக்கு வரும்வரை சாய்ந்தமருது பிரதேசத்தில் எரிபொருளை (பெற்றோல், டீசல்) அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும், தொடர்ச்சியாக ஒரு நபர் பெறுவதைத் தடுத்தல், கருப்புச் சந்தையினை குறைத்தல் ஆகியனவற்றை நோக்காகக்கொண்டு "Fuel Master Management" என்ற App, நேற்று முன்தினம் (12) முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் நேற்று முன்தினம் (12) அறிமுகம் செய்யப்பட்ட இந்த புதிய செயலி மூலம் சாய்ந்தமருது IOCஇல் பெற்றோல் விநியோகிக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உதவியுடன் பதிவுசெய்யப்பட்டது. எனினும், இறுதிக்கட்டத்தில் அனைத்து வாகனங்களும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குள் பிரவேசித்ததால் மக்களுக்கு



பெற்றோல் வழங்குவதில் பிரச்சினைகள் ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

எனவே, அனைவரும் எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. அதனடிப்படையில் 12/07/2022இல் பெற்றோல் விநியோகிக்கப்பட்ட வாகனங்கள் மீண்டும் 10 நாட்கள் இடைவெளியின் பின்னரே பெற்றோலை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு கிழமைக்கு 2 அல்லது 3 பவுசர்கள் எரிபொருள் பெறக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதால் 12/07/2022இல் பெற்றோல் பெறாதவர்கள் மாத்திரம் சமூகம் தந்து வேறு தினத்தில் பெற்றோலை பெறமுடியும். எரிபொருள் பெறவரும் பொதுமக்கள் இந்த APP Systemக்கு முழுமையாக ஒத்துழைப்பு தரும் பட்சத்தில் உத்தியோகத்தர்கள் தன்னார்வ சேவையாக இதனை செய்யத் தயாராக உள்ளார்கள்.

தன்னுடைய ஆலோசனை மற்றும் அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த Appஐ உருவாக்குவதற்கு உதவிபுரிந்த Income Developers நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன், இந்த இக்கட்டான சூழ்நிலையில் பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வாகனங்களை பதிவுசெய்வதற்கு உதவிசெய்த அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

# திருகோணமலையில் இ.போ.ச. ஊழியர்கள் எரிபொருள் வழங்கக் கோரி பணிப்பகிஷ்கரிப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

இலங்கை போக்குவரத்து சபையின் திருகோணமலை சாலை ஊழியர்கள் தங்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரி நேற்று (13) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் நேற்று (13) ஆரம்பிக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவையாளர் எமக்கு எரிபொருள் எங்கே, எரிபொருள் கிடைக்கும் வரை தொடர் வேலை நிறுத்தம், அதிகாலையில் பணிக்கு வந்து இரவில் வீடு செல்லும் நாங்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வது எவ்வாறு, வழங்கு வழங்கு எமக்கு எரிபொருள் வழங்கு போன்ற பதாகைகளை ஏந்தியவாறு திருகோணமலை போக்குவரத்து சபை ஊழியர்கள் கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



## போடியார் புலம்பல்!



**கோட்டாவுக்கு வந்த வினையப் பாருங்கப்பா..**

**பதவியிலயும் இருக்க ஒண்ணா, சொந்த நாட்டுலயும் இருக்க ஒண்ணாத மலேசியாவுக்கும் கள்ள களவுலதானே போய் உள்ளார்.. இதெல்லாம் பார்த்தா முள்ளிவாய்க்காலில் செத்தவங்கட ஆவி படுத்திற பாடு எலுவா?**

**அவரு மட்டுமல்ல அந்த ராஜபக்ஷ குடும்பம் எப்படி வாழ்ந்தவங்களுக்கு இப்படி ஆச்சே.**

**இதுதான் அதர்மம் தோக்கும். தர்மம் ஜெயிக்கும் எண்டதுக்கான பாடம்!**

# அக்கரைப்பற்றில் கோழி திருடிய நபர் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பகுதியில் நாட்டுக் கோழிகளை திருடிய நபர் ஒருவர் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கோழிகளை திருடியதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று முன்தினம் (12) ஆஜர்படுத்தியபோது குற்றத்தை ஒப்புக்கொண்ட நபருக்கு மேற்படி பிணை வழங்கப்பட்டது.

நாட்டுக் கோழிகளை வளர்த்துவந்த நபர் ஒருவரது வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு (08) கோழிக்கூட்டை உடைத்து அவர் வளர்த்துவந்த 89 நாட்டுக் கோழிகளில் 45,000 ரூபா பெறுமதியான 25 நாட்டுக் கோழிகள் களவாடப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் கோழி உரிமையாளர் செய்திருந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப் பட்டிருந்தார்.

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் குறித்த நபரை ஆஜர் செய்தபோது சந்தேக நபர் கறுப்பு, வெள்ளை, செவலை ஆகிய நிறங்களிலான 12 கோழிகளை களவாடியதாக ஒப்புக்கொண்டதையடுத்தே சந்தேக நபர் ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பான விசாரணையை அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் பகிதரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

# அக்கரைப்பற்று விஜயராம மகா விகாரையில் இரத்ததானம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில் "உதிரம் கொடுத்து உயிர்காப்போம்" எனும் தொனிப்பொருளில் ஸ்ரீ விஜயராம மகா விகாரையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம மகா விகாரையில் நேற்று (13) நடைபெற்றது.



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை, வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அஸாத். எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க, இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முகாமில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பிரதிநிதிகள், விகாரையின் மதகுருமார்கள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியதுடன், பெரும்பாலானவர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலை மாவட்ட ஆதிவாசிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல்

(கந்தளாய், திருகோணமலை, கிண்ணியா, சீனக்குடா நிருபர்கள்)

திருகோணமலை மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களில் வசிக்கும் ஆதிவாசிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் நுண்நிதி செயற்பாடுமூலம் மாவட்ட பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (12) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலகத்தின் நல்லூர், சந்தோசபுரம் உள்ளிட்ட கரையோரம் சார்ந்த சில கிராமங்களிலும் வெருகல் பிரதேசத்தின் சில கரையோரம்சார் கிராமங்களிலும் ஆதிவாசிகள்





வசித்து வருகின்றனர்.

யுத்தத்திற்கு பின்னர் இடம்பெயர்ந்தபோது தமது பூர்வீக இடங்கள் இன்னொரு தரப்பினர் மூலம் கைப்பறப்பட்டுள்ளன. இவற்றை எமக்கு விவசாயம் செய்ய வழங்க வேண்டும். தமது தனித்துவத்தைப்பேணி செயற்பட ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அத்துடன், தம் வாழ்வாதார செயற்பாடான தேன் சேகரித்தல் தொழிலை மேற்கொள்ளும்போது வனஜீவராசி திணைக்களத்தால் தடங்கல்கள் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் மூதூர் சம்புக்கல்லிக்குளம் சார்ந்த பகுதி வெளித்தரப்பினர்களால் தமது தனியார் காணி என குறிப்பிட்டு மண் நிரப்பப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தது. எமது எதிர்ப்பு காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அக்குளத்திலே எமது மக்கள் மீன்பிடித்து வாழ்க்கையை நடாத்துகின்றனர். அந்த இடம் தனியாருக்குரியதாயினும் அவர்களுக்கு மாற்றுக்காணியை வழங்கி இக்குளத்தில் தம் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள உதவவேண்டும் என இதன்போது கலந்துகொண்ட ஆதிவாசியொருவர் தெரிவித்தார்.


அரசாங்க அதிபர் குறித்த விடயங்களை கவனத்திற்கொண்டதுடன், உரிய விடயங்கள் தொடர்பில் அவதானத்தை செலுத்துமாறு இதன்போது உரிய பிரதேச செயலாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும் மாவட்டத்தில் முறைமைப்படுத்தப்படாத நுண்நிதி நிறுவனங்களில் பெண்கள் வெவ்வேறு நோக்கங்களுக்காக கடன்களை பெறுவதனால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது. இவற்றை ஒழுங்குபடுத்தல் மற்றும் மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கவேண்டியதன் தேவைப்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

மனித உரிமை ஆணைக்குழுவுக்கு ஆதிவாசிகளது பிரச்சினைகள், நுண்நிதி செயற்பாடு காரணமாக ஏற்பட்டுள்ள சமூகப் பிரச்சினைகள் குறித்து எத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் நிலைவரங்களை அறியும் நோக்கில் திருகோணமலைக்கு கள விஜயம் மேற்கொண்டதாக இதன்போது கருத்துரைத்த மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் டொக்டர் நிமல் கருணாசிறி தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், சூம் செயலியூடாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## 200 வருடம் பழைமை வாய்ந்த மரமொன்றில் தீப்பரவல்



(மட்டக்களப்பு நிருபர்)


மட்டக்களப்பு காத்தான்குடியில் நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த மரமொன்றில் நேற்று மாலை தீ பரவியதால் மரம் முற்றாக எரிந்துள்ளது.

காத்தான்குடி 6ஆம் குறிச்சி அப்துல் ஜவாத் அலீம் வீதியிலுள்ள காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியிலேயே இந்த மரம் நின்றுள்ளது.

குறித்த மரத்தின் கிளைகள் அகற்றப்பட்ட நிலையில் நின்ற இம் மரத்தின் மீது தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயை பொதுமக்கள் அணைத்துள்ளனர். எனினும், மரம் முற்றாக எரிந்துள்ளது. இதேபோன்று இந்த மையவாடியின் மற்ற பகுதியிலும் இன்னுமொரு மரத்திலும் தீப்பரவல் ஏற்பட்டு, அந்த மரமும் எரிந்துள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

# வாழைச்சேனை மாவடி மாரியம்மன் ஆலய திருக்குளிர்த்தி திருச்சடங்கு உற்சவம்





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான பேத்தாழை வாழைச்சேனை அருள்மிகு மாவடி மாரியம்மன் ஆலயத்தின் திருக்குளிர்த்தி திருச்சடங்கு உற்சவம் நேற்று (13) காலை பக்தர்களின் அரோகரா கோஷத்துடனும் சிலம்பு ஒலியுடன் திருக்குளிர்த்தி ஆடல் வைபவத்துடன் நிறைவுபெற்றது.



கடந்த 07ஆம் திகதியன்று திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி 07 நாட்கள் திருச்சடங்கு நடைபெற்று நேற்று (13) திருக்குளிர்த்தி வைபவத்துடன் திருச்சடங்கு இனிது நிறைவுபெற்றது.

தொடர்ந்து அம்பாளுக்கு விசேட பூசை இடம்பெற்று அம்பாள் உள் வீதி வலம் வந்து பக்தர்கள் புடை சூழ திருக்குளிர்த்தி பாடும் இடத்திற்கு சென்று திருக்குளிர்த்தி பாடல் பாடப்பெற்று அம்பாள் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கி ஆலய முன்றலில் உள்ள தீர்த்த ஆற்றில் வழக்கம்போல் தீர்த்தமாடப்பட்டது.

திருச்சடங்கானது ஆலயத் தலைவர் சி.சுகுந்தன் தலைமையில் ஆலயகுரு அரசு ஐயா நடத்தி வைத்தார்.

# சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட மூன்று சந்தேகநபர்கள் கைது

(கோணாவத்தை நிருபர்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றி பியர் விற்பனையில் ஈடுபட்ட மூன்று நபர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில், விநாயகபுரம், காஞ்சிரங்குடா ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றி 625 மில்லி லீற்றர் பியர் 600 ரூபாவிற்கு விற்பனை செய்தமைக்காக மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை அக்கரைப்பற்று மேலதிக மாவட்ட/நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜீத் முன்னிலையில் நேற்று முன்தினம் (12) ஆஜர்செய்தபோது அனுமதிப்பத்திரமின்றி பியர் விற்பனையில் ஈடுபட்டமைக்காக தலா பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

# உலக செய்திகள்

# உக்ரைனின் மைகோலைவ் நகர் மீது ரஷ்யா தொடர் ஏவுகணைத் தாக்குதல்

## 2 மருத்துவமனைகள் - பாடசாலை கட்டடங்கள் சேதம்; 12 பேர் படுகாயம்!



உக்ரைனின் மைகோலைவ் நகரில் ரஷ்யப் படைகள் ஏவுகணைகள் மூலம் நடத்திய தொடர் தாக்குதலில் அங்கிருந்த குடியிருப்புக் கட்டடமொன்று தீப்பற்றி எரிந்தது.

உக்ரைன் மீது இன்று 141ஆவது நாளாகவும் ரஷ்யத் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தமை குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவின் தொடர் தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ் உட்பட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன், 87 இலட்சத்துக்கும் அதிகமானோர் நாட்டைவிட்டு வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், மைகோலைவ் நகரில் தாக்குதலை தீவிரப்படுத்திய ரஷ்யப் படைகள் ஒரே நாளில் அடுத்தடுத்து 19 ஏவுகணைகளை ஏவி தொடர் தாக்குதல் நடத்தியதாக மைகோலைவ் மேயர் Oleksandr Senkevych தெரிவித்துள்ளார்.

இதில் 2 மருத்துவமனைகள், பாடசாலையொன்று மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதுடன், 12இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### 1.7 பில்லியன் டொலர் நிதி உதவி

இதேவேளை, உக்ரைனுக்கு பொருளாதார உதவியாக 1.7 பில்லியன் டொலர் நிதி வழங்குவதாக அமெரிக்கா மற்றும் உலக வங்கி அறிவித்துள்ளது.

ரஷ்யப் போரால் உருக்குலைந்த உக்ரைனின் பொருளாதாரத்தை மீட்க, சுகாதார ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய பணம் வழங்கப்படுவதாக அமெரிக்க சர்வதேச வளர்ச்சி அமைப்பு மற்றும் கருவூலத்துறை தெரிவித்துள்ளது.

உக்ரைன் மருத்துமனைகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்ய மட்டும் இதுவரை 4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி வழங்கியுள்ளதாக அமெரிக்க சர்வதேச வளர்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

# பல்வேறு நாடுகளில் மீண்டும் வேகமெடுக்கும் கொரோனா

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



உலகம் முழுவதும் மீண்டும் கொரோனா பரவல் வேகம் அதிகரித்துள்ள நிலையில், கொரோனா வைரஸ் இன்னும் முழுமையாக அழியவில்லை என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் தெரிவித்துள்ளார்.

இந்தியா உட்பட உலகின் பல நாடுகளில் கடந்த சில வாரங்களாக கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்து வருகிறது. இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் படிப்படியாக உருமாற்றமடையும் எனவும், மேலும் உருமாற்றமடைய வாய்ப்பிருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே, பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து தனிமனித இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தை ஆளப்போகும் இந்தியன்



பிரித்தானிய பிரதமர் போட்டியில் முன்னாள் அமைச்சர் சஜித் ஜாவித் வெளியேறிய நிலையில், இந்திய வம்சாவளி ரிஷி சுனக் பிரதமராக வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆதரவாளர்கள் குறைவால் சஜித் ஜாவித் பிரதமர் வேட்பாளர் போட்டியிலிருந்து வெளியேறியதாக கூறப்படுகிறது. தலா 20 எம்.பிக்கள் ஆதரவுடன் ரிஷி சுனக், வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் உள்ளிட்ட 8 பேர் பிரதமர் வேட்பாளர் போட்டியில் நீடிக்கின்றனர்.

நேற்றுமுதல் சுற்று வாக்கெடுப்பு நடைபெற்றது. முதல் சுற்றில் வெற்றிபெறும் வேட்பாளர்கள் அடுத்தகட்ட தேர்வுகளை சந்திக்கவுள்ளனர்.



பிரித்தானிய பிரதமர் பதவிக்கு போட்டியிடுவோர்......

# பாலியல் குற்றத்தில் ஈடுபட்டால் இரசாயன முறையில் ஆண்மை நீக்கம்

## தாய்லாந்தில் நிறைவேறியது மசோதா



பாலியல் குற்றவாளிகளுக்கு இரசாயன ஊசி மூலம் ஆண்மை நீக்கம் செய்ய அனுமதிக்கும் மசோதாவை தாய்லாந்து செனட் நிறைவேற்றியது.

இந்த மசோதா 145 செனட்டர்களின் ஆதரவைப் பெற்றது. 2013 மற்றும் 2020இற்கு இடையில் தாய்லாந்து சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்ட 16,000 பாலியல் குற்றவாளிகளில் 4,848 பேர் மீண்டும் பாலியல் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

குறுகிய சிறை காலத்திற்குப் பின்னர் மீண்டும் குற்றமிழைக்கும் நிலையில் இந்த மசோதாவின் கீழ் அவர்கள் இரசாயன ஊசிகளைப் பெறலாம். தற்போது, போலந்து, தென் கொரியா, ரஷ்யா, எஸ்டோனியா மற்றும் அமெரிக்காவின் சில மாநிலங்களில் மட்டுமே கெமிக்கல் காஸ்ட்ரேஷன் பயன்பாடு சட்டப்பூர்வமாகவுள்ளது.



சவூதி அரேபியாவின் மக்கா நகரிலுள்ள மசூதியில் புறாக் கூட்டத்துக்கு நடுவே அமைதியாக உறங்கும் ஹஜ் யாத்திரிகர்கள்....

# ஆழ்கடலில் மைக்ரோ பிளாஸ்ரிக்கை உறிஞ்சும் ரொபோ மீன் கண்டுபிடிப்பு

ஆழ்கடலில் காணப்படும் நுண்ணிய பிளாஸ்ரிக் துகள்களை உறிஞ்சும் மீன் வடிவிலான சிறிய ரொபோவை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.



தென்மேற்கு சீனாவின் சிச்சுவான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள இந்த ரொபோ மீன் 1.3 செ.மீ. நீளம் கொண்டவை.

அகச்சிவப்பு ஒளிக்கதிர் மூலம் இயங்கும் இந்த மீன், கழிவுகளை உறிஞ்சி சேதமடைந்தாலும் தன்னைத்தானே மீட்டெடுக்கும் திறன் கொண்டவை. மற்ற ரொபோக்களை விட வேகமாக நீந்தும் திறன்கொண்ட ரொபோ மீன், கடலில் ஏற்பட்டுள்ள மாசு குறித்த விவரங்களை அறிந்துகொள்ள பயன்படுகிறது.

# ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் சிரிய தலைவர் ட்ரோன் தாக்குதலில் பலி



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் சிரிய தலைவரை ட்ரோன் தாக்குதல் நடத்தி கொன்றதாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

Jindayris பகுதியில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் இரு சக்கர வாகனத்தில் சென்ற ஐ.எஸ். தலைவர் மகெர் அல்-அகல் கொல்லப்பட்டதாக பென்டகன் மத்திய கொமாண்ட் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

சிரிய மனித உரிமைகளுக்கான கண்காணிப்பகம் மகெர் அல்-அகல் கொல்லப்பட்டதை உறுதிசெய்தது. Levant பிராந்தியத்தின் ஆளுநராக மகெர் அல்-அகல் அழைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஸ்பெயினில் ரெட் அலர்ட்: வெப்ப அலையால் பற்றியெரியும் வனம்



ஸ்பெயினில் கொளுத்தும் வெயிலின் தாக்கத்தால் வடபகுதி மக்களுக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெயிலின் தாக்கத்தால் வனப்பகுதிகளில் பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வனத்தை ஒட்டியுள்ள குடியிருப்புகளிலுள்ள நூற்றுக்கணக்கான மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். வழக்கத்திற்கு மாறாக 108 டிகிரி பரன்ஹீட் அளவுக்கு வெப்பம் நீடிப்பதால் கடற்கரை, தண்ணீர் பூங்காக்களை நோக்கி மக்கள் படையெடுத்து வருகின்றனர்.

# 8 அம்ச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு திருமணம் செய்துகொண்ட ஜோடி






திருமணங்கள் நடைபெறும் விதம் சமீப காலங்களில் மிகப்பெரிய மாற்றங்களை அடைந்துள்ளது. கூடவே, திருமணம் செய்துகொள்பவர்கள் தங்கள் துணையின் மீது வைக்கும் எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது. திருமணத்தின் ஆகப்பெரிய உறுதிமொழியே ஒருவருக்கு ஒருவர் துணையாக, வாழ்நாள் முழுதும் இன்ப துன்பங்களில் ஒன்றாகக் கடப்போம் என்பதே. ஆனால், இங்கு ஒரு திருமண ஜோடி போட்டுள்ள ஒப்பந்தம் பலரையும் வியக்க வைத்துள்ளது.

விஜய் மற்றும் சிம்ரன் நடித்த 'பிரியமானவளே' திரைப்படத்தில் அக்ரிமென்ட் கல்யாணத்தைப் பார்த்திருப்போம். அதேபோல் அசாமை சேர்ந்த சாந்தி மற்றும் மிண்டு என்ற திருமண ஜோடி ஒப்பந்தம் (கென்ட்ராக்ட்) போட்டு கல்யாணம் செய்துள்ளனர்.


இந்த ஒப்பந்தத்தில் இருவரும் கையொப்பம் இடும் வீடியோவை வெட்லாக் போட்டோகிராபி (wedlock photography) தனது இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட்டது.

அப்படி இவர்கள் என்னதான் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என வியப்பாக இருக்கிறதா...?

"மாதத்திற்கு ஒரு முறைதான் பீட்சா, கண்டிப்பாக தினந்தோறும் சேலை உடுத்த வேண்டும், தினமும் ஜிம் செல்ல வேண்டும், எல்லா பார்ட்டிகளிலும், நல்ல புகைப்படங்களை எடுக்க வேண்டும். 15 நாட்களுக்கு ஒருமுறை ஷொப்பிங் செல்ல வேண்டும், இரவுநேர பார்ட்டிகளை என்னோடு மட்டுமே நடத்த அனுமதி போன்ற 8 அம்ச ஒப்பந்தத்தில் ஜோடிகள் இருவரும் கையெழுத்திட்டனர். சாட்சி கையெழுத்துகளும் அதில் இடம்பெற்றிருந்தன.

# பிரபல மொடல் அழகிபோல் மாற 40 முறை அறுவை சிகிச்சை

## மீண்டும் பழைய தோற்றத்துக்கே திரும்ப 95 இலட்சம் செலவில் அறுவை சிகிச்சை



பிரபல மொடல் அழகி கிம் கர்டாஷியன்போல் தோற்றமளிக்க 40 முறை அழகு சாதன அறுவை சிகிச்சை செய்துகொண்ட அமெரிக்க மொடல் அழகியொருவர், தனது பழைய தோற்றத்துக்கே திரும்ப மீண்டும் அறுவை சிகிச்சை செய்துவருகிறார்.

29 வயதாகும் ஜெனிபர் பம்ப்லோனா கண்கள், மூக்கு, உதடு என கடந்த 12 ஆண்டுகளில் 40 அறுவை சிகிச்சைகள் செய்துள்ளார். கிம் கர்டாஷியன் போன்ற தோற்றத்தால் பேரும், புகழும் கிடைத்தாலும் ஒரு கட்டத்தில் தனது சுய அடையாளத்தை இழந்ததை எண்ணி வருந்த தொடங்கியுள்ளார்.

உடல் தோற்றத்தில் குறைபாடுகள் உள்ளதாக நினைத்து வருந்தும் ஒருவித மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளதை உணர்ந்த ஜெனிபர் பழைய தோற்றத்துக்கே மாற முடிவெடுத்தார்.

கிம் கர்டாஷியன்போல் காட்சியளிக்க நான்கே முக்கால் கோடி செலவில் 40 முறை அறுவை சிகிச்சை செய்த ஜெனிபர், பழைய தோற்றத்துக்கு திரும்ப தற்போது 95 இலட்சம் ரூபா செலவில் அறுவை சிகிச்சை செய்து வருகிறார்.

# நெருப்பிலும் உருகாத வித்தியாசமான ஐஸ்கிரீம்



சீனாவைச் சேர்ந்த சைஸ்கிரீம் என்ற ஐஸ்கிரீம் நிறுவனம் நெருப்பிலும் உருகாத வித்தியாசமான ஐஸ்கிரீமை தயாரித்துள்ளது.

ஒரு பக்கம் மக்களின் கவனத்தை ஈர்த்தாலும், இன்னொரு பக்கம் மக்களிடையே இதில் அதிக இரசாயனங்கள் சேர்க்கப்பட்டிருக்கும் என்றும், இதன் விலை அதிகமாகத்தான் இருக்கும் எனவும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

விலை மற்றும் அதில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்கள் பற்றி அந்நிறுவனம் விளக்கமளித்துள்ளது. இதன் விலை 66 சீன யுவான். அதாவது இந்திய ரூபாவின் மதிப்பின்படி 780 ரூபா என்று தெரிவித்துள்ளது.

மேலும், இதில் சேர்க்கப்பட்டிருக்கும் மூலப்பொருட்கள் அனைத்தும் சீனாவின் தேசிய உணவு பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டவையே என்றும் தெரிவித்துள்ளது.

# கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் மோதல்!

## - நால்வர் காயம்

காலிமுகத்திடல் போராட்டக் களத்தில் ஏற்பட்ட முரண்பாட்டில் நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று (13) காலை இரு தரப்பினருக்கிடையில் இந்த மோதல் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்போது காயங்களுக்குள்ளான நால்வர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், நால்வர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

15 தொடக்கம் 20 வயதுக்கிடைப்பட்ட கொழும்பு - 15 மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இந்த மோதலுக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.



# சஜித் அல்லது அநுரவிடம் அரசை ஒப்படைக்க வேண்டும்

## சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி தெரிவிப்பு

நாட்டில் அரசாங்கத்தை அமைப்பதற்கான பொறுப்பை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு அல்லது மக்களின் நம்பிக்கையை வென்று வரும் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஒப்படைக்க வேண்டும் - என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்விரு கட்சிகளுக்கும் ஒப்படைக்க முடியாவிட்டால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் ஜனாதிபதி பதவியை யாருக்குக் கொடுக்கலாம் எனத் தீர்மானிக்க வேண்டும்.

அமைச்சுகளுக்கான தலைகளை மாற்றிக்கொண்டிருந்தால் நாட்டில் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என நான் நம்புகிறேன். அரச முகாமைத்துவத்தில் அனுபவம் உள்ளவர் ஒருவருக்கே நாட்டைக் கையளிக்க வேண்டும். அதனைவிடுத்து, நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமையில் அரசியல் இலாபம் தேட முனையக்கூடாது. நாட்டு மக்களின் குரலுக்கு செவிமடுக்காமையின் காரணமாகவே பிரதமரின் இல்லத்துக்கு தீ வைக்கப்பட்டது. நாம் அந்தச் சம்பவத்தை ஏற்றுக்கொள்ளாதபோதிலும் மக்களின் மனநிலை குறித்து அறிந்துகொள்ள வேண்டியது அரசியல்வாதிகளின் கடமையாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் வீதியில் இறங்கி நடந்துசெல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவளித்த அனைத்துத் தரப்பினரும் இப்போது அரசுக்கு எதிராக இருக்கிறார்கள் - என்றார்.

# அரசாங்கத்துக்கு எதிராக காலியில் ஆர்ப்பாட்டம்



மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (13) காலி பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்றது.

"பலத்தைக் காட்டியிருந்தாலும் இன்னும் பிரச்சினை நிறைவுக்கு வரவில்லை, புதிய மக்கள் ஆணைக்காக எழுச்சி பெறுவோம்" எனும் தொனிபொருளில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், பெருமளவிலான மக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# ரயில் சேவைகளுக்கென புதிய இலக்கம் அறிமுகம்

நாட்டில் ரயில் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்வதற்கும், முறைப்பாடு செய்வதற்கும் ஏற்ற விதத்தில் 1971 என்ற அவசர தொலைபேசி இலக்கம் நேற்று காலை 7 மணிமுதல் 24 மணிநேரமும் இயங்கும் - என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரயில் புறப்படும் நேரம், ஆசனங்களை ஒதுக்குதல், ரயில் கட்டணம் தொடர்பான தகவல்கள், பாதுகாப்பு சேவை, ரயில் குறுக்குப் பாதையில் இடம்பெறும் சிக்கல்கள் உள்ளிட்ட பல தகவல்களையும் குறைபாடுகளையும் இதன்மூலம் முன்வைக்க முடியும். மும்மொழிகளிலும் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.





வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமான சிலாபம், மானாவாரியில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்று முன்தினம் (12) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பக்த அடியார்கள் பலர் கலந்துகொண்டனர். (படங்கள் - உடப்பு நிருபர்)

# மாரவில வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(ஜூட் சமந்த)

மாரவில ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அந்த வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலை கடமைகளுக்கு வருவதற்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இந்நிலை உருவாகியுள்ளது.

சிலாபம், மாரவில மற்றும் வென்னப்புவ ஆகிய பிரதேசங்களில் சுகாதார சேவையாளர்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்காக சிலாபம் - காக்கபள்ளிய மற்றும் இனிகொடவெலவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஆகிய இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த முதலாம் திகதி காக்கபல்லிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒக்டெயின் 95 மற்றும் இனிகொடவெல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒக்டென் 92 எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது.

கடந்த 07ஆம் திகதி மாலை காக்கபல்லிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளது. இருந்தபோதிலும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய ஜூலை 08ஆம் திகதி சுகாதார சேவையாளர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன.

காக்கபல்லிய எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பம்பிகள் எரிபொருள் கூட்டுத்தாபனத்தால் சீல் வைக்கப்பட்டுள்ளன.

அந்த சீல் நீக்கப்பட்டு எரிபொருளை விநியோகிப்பதற்கான அனுமதி தமக்கு இதுவரையில் கிடைக்கவில்லை என காக்கபல்லிய எரிபொருள் நிரப்பு நிலைய அதிகாரியொருவரிடம் வினவியபோது குறிப்பிட்டார். இதேவேளை, இனிகொடவெல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த முதலாம் திகதியின் பின்னர் இதுவரையில் எரிபொருள் பெற்றக்கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தில் கடவுச்சீட்டு தயாரிப்பதற்கு இலஞ்சம்

## மூவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த இளைஞர்கள்





குடிவரவு-குடியகல்வுத்திணைக்களத்தின் கண்டி கிளை அலுவலகத்திற்கு கடவுச்சீட்டு பெற வரும் இளைஞர்களுக்கு ஒரு நாள் மற்றும் சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரித்து தருவதாகக் கூறி அவர்களிடமிருந்து ஆறாயிரம் முதல் 50 ஆயிரம் ரூபா வரை பணம் பெற்றதாகக் கூறப்படும் அந்த அலுவலகத்தின் முன்னாள் ஊழியர் ஒருவர் மற்றும் மேலும் இருவரை அங்கிருந்த இளைஞர்கள் குழுவொன்று பிடித்து கண்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது.

ஒரு நாள் சேவையின்கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்குவதற்கு கண்டி அலுவலகம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பங்களையே வழங்குகிறது. குறித்த சந்தேக நபர்கள் சில விண்ணப்பங்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்டு பணத்திற்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஒரு நாள் சேவையின்கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபா வரையிலும், சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்காக ஆறாயிரம் ரூபா வரையிலும் சந்தேகநபர்கள் பெற்றுள்ளதாக இந்த விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஒரு நாள் சேவையின்கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக தெஹியத்த கண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரிடம் 25,000 ரூபாவை முற்பணமாக பெற்றுக்கொண்டபோது வெளிநாட்டு கடவுச்சீட்டு பெற வந்த இளைஞர்கள் குழுவொன்றினால் மூன்று சந்தேக நபர்கள் பிடிபட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவரில், குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தில் சில காலம் பணிபுரிந்தவர் என கூறப்படும் ஒருவரும், முச்சக்கரவண்டி சாரதி ஒருவரும், மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயம்

ஊரகஸ்மங்சந்தி, கொரகின பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நபரொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஊரகஸ்மங்சந்தி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் காயங்களுக்குள்ளான நபர் முதலில் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர், கராபிட்டிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

ஊரகஸ்மங்சந்தி, கொரகின பிரதேசத்தைச் சேரந்த தில்ஷிக இரோஷன் என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார். அவரின் நண்பர்கள் சிலருடன் மதுபானம் அருந்திகொண்டிருந்தபோது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் தனது நண்பர்களுடன் மது அருந்திவிட்டு அருகில் சென்றபோது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தனிப்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# யானையை கொன்றவருக்கு 1,75,000 ரூபா அபராதம்

தலாவ பகுதியில் யானையொன்றைக் கொலைசெய்த குற்றத்துக்காக நபர் ஒருவருக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

விவசாய நிலத்துக்கு சேதம் விளைவிப்பதாகக் கூறி அந்த நபர் மின்சார வேலியொன்றை அமைத்துள்ளார். இந்நிலையில், அந்த மின்சார வேலியில் சிக்கி யானையொன்று உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் விசாரணைகள் மேற்கொண்டதுடன் குறித்த நபரை தம்புத்தேகம நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இந்த வழக்கை ஆராய்ந்த நீதவான் நுவான் கௌஷல்ய, சந்தேக நபருக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

தலாவ, கரகஹவெவ பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாட்டுக்கமைய யானை உயிரிழந்தமை தொடர்பில் தலாவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி பீ.பி. முனசிங்க தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அண்மைக்காலமாக சட்டவிரோதமாக நாட்டிலிருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையின் காரணமாக சட்டவிரோதமாக குடியேறுபவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை கடல் வழியாக இடம்பெயர முயற்சித்த 943 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன் எண்ணிக்கை 830 ஆகும். எஞ்சியவர்கள் இந்தியாவுக்கு இடம்பெயர முயன்றபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

# மத்துகம எரிபொருள் நிலையத்தில் மோதல்

மத்துகம நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மத்துகம குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இருதரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலை தடுக்க முயன்றபோது நபர் ஒருவரின் தாக்குதலுக்கு இலக்காகி அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மீதுதாக்குதல் நடத்திய சந்தேக நபர் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







இந்திய தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஏற்பாட்டில் இந்திய தமிழ்நாட்டு அரசாங்கமும் தமிழ்நாட்டு மக்களும் இணைந்து இலங்கை மக்களுக்கு வழங்கிய "தமிழ்நாட்டு மக்களிடமிருந்து அன்புடன்" என்ற உலருணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (13) கொழும்பில் இடம்பெற்றது. கொழும்பு, டாம் வீதி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்களுக்கு 10 கிலோ அரிசிப் பொதி டாம் வீதி பிரதேச செயலகத்தில் வைத்து கிராம அலுவலர்களினூடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)




# வேகத்தால் மிரட்டிய இந்தியாவுக்கு இலகு வெற்றி

இங்கிலாந்து அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் சுற்றுலா இந்திய அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்றது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருதரப்பு தொடரில் விளையாடி வருகிறது. டெஸ்ட் மற்றும் டி20 கிரிக்கெட் தொடர்கள் முடிந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் த ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது. நாணய சுழற்சியில் இந்திய அணி வெற்றி பெற முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியை 25.2 ஓவர்களில் 110 ஓட்டங்களில் சுருட்டியது இந்திய அணி. ஜஸ்பிரிட் பும்ரா 7.2 ஓவர்கள் வீசி 19 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தார். மொஹமட் ஷமி 3 விக்கெட்டுகளும், பிரசித் கிருஷ்ணா 1 விக்கெட்டும் கைப்பற்றியிருந்தனர். 111 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கை இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 18.4 ஓவர்களில் எட்டியது.

3 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1-0 என முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது போட்டி இன்று லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

## Farman's Champions Trophy 2021 - 2022

# இன்று கோலாகலமாக ஆரம்பம்




காத்தான்குடி பர்மாண்ஸ் நட்புறவு ஒன்றியத்துடன் இணைந்து றப்பானியாஹ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பர்மாண்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம் 2021 – 2022 மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

கடந்த 2020ஆம் ஆண்டு காத்தான்குடி மண்ணில் இதுவரையில் நடைபெற்றிராத ஒரு கிரிக்கெட் தொடரைப் போன்று மிக பிரம்மாண்டமான முறையில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த பர்மாண்ஸ் சம்பியன்ஸ் கிண்ண தொடரில் 16 அணிகள் பங்கேற்ற நிலையில், ஹூஸைனியா விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்நிலையில் 2021ஆம் ஆண்டு முன்னரை விட பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடுசெய்யப்பட்ட குறித்த தொடரானது, முழு உலகிலும் ஏற்பட்ட கொவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. அந்த வகையில் 2021 – 2022 ஆகிய இரு ஆண்டுகளை இணைத்து இந்த வருடம் போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதல் தொடரில் பங்கேற்ற இரு அணிகள் விலகிய நிலையில், அதற்கு மாற்றாக இரு அணிகள் இணைக்கப்பட்டு நான்கு குழுக்களில் மொத்தமாக 16 தலைசிறந்த அணிகள் பங்கேற்கின்றன. இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை போட்டிகள் அனைத்தும் காத்தான்குடி விக்டெரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றன.








அதன்படி தொடரின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காத்தான்குடியில் நடைபெற்றது. இதன்போது தொடரின் சம்பியன் கிண்ணம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், தொடருக்கான தீம் பாடலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. போட்டிகள் தொடர்பான முழு விளக்கமும் ஏற்பாட்டாளர்களினால் வழங்கப்பட்டது. மேலும் தொடரின் அனுரனையாளர்களை கௌரவித்து நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மறைந்த கிரிக்கெட் வீரர் பர்மானின் சகோதரர் சட்டத்தரணி எம்.ஐ.அஜ்மீர் கவாஜா நவாஸ் கலந்து சிறப்பித்தார். மேலும் தொடரின் அனுசரனையாளர்கள், நடுவர்கள், ஊடகவியலாளர்கள், 16 அணிகளின் தலைவர்கள் மற்றும் நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுவினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். குறித்த தொடருக்கு அச்சு ஊடக அனுசரனையை 'தமிழன்' நாளிதழ் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக மாஸ்டர்ஸ் தடகள சம்பியனான 94 வயது பாட்டி




உலக மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் ஜூன் 29முதல் ஜூலை 10வரை ஃபின்லாந்தின் டாம்பயர் நகரத்தில் நடைபெற்றது. இது 35 வயது தொடக்கம் அதற்கு மேற்பட்ட வயதினருக்கான தடகளப் போட்டித் தொடராகும்.

டாம்பயரில் நடைபெற்ற உலக மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவைச் சேர்ந்த 94 வயதான பகவானி தேவி தங்கப்பதக்கம் வென்றார். அவர் 100 மீற்றர் இலக்கை 24.74 விநாடிகளில் கடந்து வெற்றிவாகை சூடினார்.

உலக மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப்பில் 100 மீற்றர் ஸ்பிரிண்ட் போட்டியில் 24.74 விநாடிகளில் பந்தயத்தில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். விளையாட்டில் சாதனை புரிவதற்கு வயது ஒரு தடையில்லை என்பதை பகவானி தேவி நிரூபித்துள்ளமை உண்மையிலேயே பாராட்டுக்குரிய முயற்சி தான். தடகளம் மட்டுமின்றி குண்டு எறிதல் பிரிவிலும் அவர் வெண்கலப் பதக்கத்துடன் மொத்தமாக மூன்று பதக்கங்களை வென்று சாதனைப் படைத்தார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# எல்.பி.எல். தொடருக்கான போட்டி அட்டவணை வெளியானது




2022ஆம் ஆண்டுக்கான லங்கா ப்ரீமியர் லீக் தொடர் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் அடிப்படையில் அதற்கான உத்தியோகபூர்வ போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. நடப்பு சம்பியனான ஜப்னா கிங்ஸ் மற்றும் கோல் கிளேடியேட்டர்ஸ் அணிகள் முதல் போட்டியில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

தொடரில் மொத்தமாக 20 லீக் போட்டிகள் உட்பட 24 போட்டிகள் நடைபெறவுள்ளன. ஆகஸ்ட் 10ஆம் திகதி வரை 14 போட்டிகள் நடைபெறவுள்ளதுடன், இந்தப்போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதன் பின்னர் நடைபெறவுள்ள லீக் போட்டிகள், குவாலிபையர், எலிமினேட்டர் மற்றும் இறுதிப்போட்டிகள் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

# இந்திய சாதனையை முறியடித்த ஷமி

அதிவேகமாக ஒருநாள் கிரிக்கெட்டில் 150 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையை படைத்துள்ளார் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஷமி. இங்கிலாந்து அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின்போது அவர் இந்த மைல்கல்லை எட்டியிருந்தார்.

31 வயதான ஷமி இந்திய அணிக்காக டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 என சர்வதேச கிரிக்கெட் களத்தில் விளையாடி வருகிறார். இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ஸ்டோக்ஸ், பட்லர் மற்றும் ஓவர்டன் ஆகியோரது விக்கெட்டை ஷமி வீழ்த்தியிருந்தார். இதில் அவர் பட்லர் விக்கெட்டை வீழ்த்தியபோது தான் இந்திய அணி சார்பாக ஒருநாள் கிரிக்கெட்டில் அதிவேகமாக 150 விக்கெட்டுகளை கைப்பற்றியவர் என்ற சாதனையைப் படைத்தார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் அவர் வீசிய 4071ஆவது பந்தில் 150ஆவது விக்கெட்டை வீழ்த்தியிருந்தார். இதே போட்டியில் தனது 151ஆவது விக்கெட்டை கைப்பற்றியும் அசத்தினார். இதன்மூலம் இதுநாள் வரை அஜித் அகர்கர் வசமிருந்த இந்த சாதனை இப்போது ஷமி வசமாகியுள்ளது.

**ஒருநாள் கிரிக்கெட்டில் மிகக் குறைந்த பந்துகளில் 150 விக்கெட்டுகளை கைப்பற்றிய பந்துவீச்சாளர்கள்**

மிட்செல் ஸ்டார்க் - 3857 பந்துகள்
அஜந்த மெண்டிஸ் - 4029 பந்துகள்
முஷ்டாக் - 4035 பந்துகள்
ரஷீட் கான் - 4040 பந்துகள்
மொஹமட் ஷமி - 4071 பந்துகள்







# "எங்களை அரவணைத்ததையும், இந்த சுற்றுப் பயணத்தையும் நாம் மறக்கமாட்டோம்" வோர்னர் நெகிழ்ச்சி

இலங்கையில் தற்போது நிலவும் இக்கட்டான சூழ்நிலையில், அவுஸ்திரேலிய அணியுடனான கிரிக்கெட் தொடரை நடத்தியமைக்காக அவுஸ்திரேலிய அணியின் வீரர் டேவிட் வோர்னர் இலங்கை மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளத்தில் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள டேவிட் வோர்னர், "அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, விருப்புடன் கிரிக்கெட் தொடரை விளையாடியமைக்கு நன்றி கூறுகின்றது. உங்கள் அற்புதமான நாட்டைப் பற்றி நான் விரும்புவது என்னவெனில், நீங்கள் எந்த சூழ்நிலையிலும் சிரித்த முகத்துடனேயே இருப்பீர்கள். அத்துடன் உபசரிக்கும் நோக்கத்துடனேயே இருக்கின்றீர்கள். அவுஸ்திரேலிய அணியை இலங்கை அரவணைத்ததையும் இந்த கிரிக்கெட் சுற்றுப் பயணத்தையும் நாம் மறக்க மாட்டோம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.


# நிந்தவூர் அல்–அஷ்ரக்குக்கு 15 தங்கப்பதக்கங்கள்

**(பொலிவேரியன் நிருபர்)**




இவ்வாண்டு 2022 நடைபெற்ற கல்முனை வலய மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவர்கள் 15 தங்கப்பதக்கங்கள் மற்றும் 9 வெள்ளிப்பதக்கங்கள் வென்று மொத்தமாக 24 மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.





இரண்டு நாட்களாக கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இவ்வலய மட்டப்போட்டியில், நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை 16 வயதுப்பிரிவு மாணவன் எம்.அப்ஸீத் அஹமட் சம்பியன் பட்டம் பெற்று வெற்றி வாகை சூடியதோடு, மாகாண மட்டப் போட்டிகளுக்கும் தெரிவாகியுள்ளார்.

வெற்றியீட்டிய அனைத்து மாணவர்களுக்கும், பயிற்சிக்கு பொறுப்பான ஆசிரியரும், பயிற்றுவிப்பாளருமான அலியார் பைஸர் மற்றும் மாணவர்களுக்கும் பாடசாலையின் உடற்கல்வி மற்றும் விளையாட்டுத்துறைக்கு பொறுப்பான ஆசிரியர்களான ஏ.ஹலீம் அஹ்மத், எம்.ஐ.எம்.அஸ்மி, ஏ.எம்.அன்சார், எம்.எஸ்.எம்.சபீர், பீ.நவரட்ணம், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஐ.எம்.எஸ்.இன்பாத் மௌலானா ஆகியோருக்கும் பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபுர் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7